விலை ரூபா: 7.00

# வலம்புரி
Valampurii

பக்கங்கள்:- பன்னிரண்டு

சங்கு 05 வள்ளுவர் ஆண்டு 2035 புரட்டாதி 20 புதன்கிழமை (06.10.2004) தொலைபேசி - 2223378 ஒலி 292

ராம்கோ
MADRAS CEMENTS LTD
RAMCO CEMENT
ஆசியாக் கண்டத்தில் சிமெந்து
முதலாம் தரத் தொழிற்சாலையில் இருந்து தயாரிக்கப்பட்டது.



நேற்று தீருவிலில் நடைபெற்ற குமரப்பா, புலேந்திரன் உட்பட்ட பன்னிரு வேங்கைகளின் நினைவுதின நிகழ்வுகளின்போது எடுக்கப்பட்ட படங்கள்.
படங்கள்: ஐங்கரன், சிவசங்கர்.

# படையினராலும் விடுதலைப் புலிகளினாலும் தடுத்து வைக்கப்பட்டிருப்பவர்களை விடுவிக்கக்கோருவது ஏற்கக்கூடியதல்ல

## யுத்தநிறுத்தக் கண்காணிப்புக்குழுத் தலைவர் தெரிவிப்பு

(நமது நிருபர்)

**தமிழீழ விடுதலைப் புலிகள் திருகோணமலையில் தடுத்து வைக்கப்பட்டுள்ள இரண்டு ஊர்காவற் படையினரையும் விடுவிப்பதற்காக தமது பத்து உறுப்பினர்களையும் விடுவிக்குமாறு கோருவது ஏற்றுக்கொள்ளக்கூடிய விடயமல்ல என்று இலங்கை யுத்தநிறுத்தக் கண்காணிப்புக்குழுத் தலைவர் மேஜர் ஜெனரல் ரொன்ட் பியூறு ஹெவ்டே தெரிவித்துள்ளார்.**

திருகோணமலையில் இரண்டு ஊர்காவற் படையினரை விடுதலைப் புலிகள் தடுத்து வைத்திருப்பது தொடர்பாக பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் சிறில் ஹேரத்தை சந்தித்துப் பேசியபின் யுத்தநிறுத்த கண்காணிப்புக்குழுத் தலைவர் மேஜர் ஜெனரல் ரொன்ட் பியூறு ஹெவ்டே விடுத்துள்ள அறிக்கையொன்றிலேயே மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

தமிழீழ விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுப் பிரதேசத்திற்குள் இரண்டு ஊர்

(12 ஆம் பக்கம் பார்க்க)

# பன்னிரு வேங்கைகளின் நினைவுதினம் நேற்று தீருவிலில் அனுஷ்டிக்கப்பட்டது

(யாழ்ப்பாணம்)

குமரப்பா, புலேந்திரன் உட்பட பன்னிரு வேங்கைகளின் 17 ஆம் ஆண்டு நினைவு தின நிகழ்வுகள் நேற்று தீருவிலில் உணர்வெழுச்சியுடன் அனுஷ்டிக்கப்பட்டது. நேற்று மாலை 5 மணிக்கு தீருவில் மருதடிச் சந்தியில் இருந்து வல்வெட்டித்துறை மகளிர் வித்தியாலய மாணவிகளின் பாண்ட் வாத்திய இசை மற்றும் மேளதாளங்களுடன் பன்னிரு வேங்கைகளின் உருவப்படங்கள் ஊர்வலமாக எடுத்துச் செல்லப்பட்டு தீருவிலில் உள்ள நினைவுத் தூபியை சென்றடைந்தது.

அங்கு பொதுச் சுடரினை மாவீரர் பணிமனைப் பொறுப்பாளர் பொன். தியாகம், கடற்புலிகளின் மகளிர் பொறுப்பாளர் கல்யாணி, யாழ். மாவட்ட கடற்புலிகளின் பொறுப்பாளர் அருணன், யாழ். அரசியல் துறை துணைப் பொறுப்பாளர் செம்மணன், தென்மராட்சி அரசியல்துறைப் பொறுப்பாளர் சிவநந், பாராளுமன்ற உறுப்பினர் என்.கே. சிவாஜிலிங்கம், மாவீரர் நிலவனின் தந்தை ஆகியோர் ஏற்[illegible] தேசியக் கொடியினை வடமராட்சி அரசியல் துறைப் பொறுப்பாளர் தயா ஏற்றின[illegible]

மலர் வணக்கத்தினை பன்னிரு வே[illegible]களினதும் பெற்றோர், சகோதரர்கள்[illegible]றும் போராளிகள் நிகழ்த்தினர். தொட[illegible] வடமராட்சி மாவீரர் துயிலும் இ[illegible] பொறுப்பாளர் தமிழரசன் தலைமையி[illegible] நினைவுக் கூட்டம் ஆரம்பமானது. இதி[illegible]

(12 ஆம் பக்கம் பார்க்க)

# பேரினவாதமோ; அதன் நேச சக்திகளோ தமிழினத்தை அழிப்பதை அனுமதியோம்!

## யாழ். மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் இளம்பரிதி சூளுரை

(திருநெல்வேலி)

அரசினால் முன்வைக்கப்படும் மாற்று யோசனைகளை ஒருபோதும் விடுதலைப் புலிகள் ஏற்றுக்கொள்ளமாட்டார்கள் என யாழ். மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் சி. இளம்பரிதி தெரிவித்துள்ளார்.

நேற்று தீருவிலில் நடைபெற்ற பன்னிரு வேங்கைகளின் நினைவு தினத்தில் கலந்துகொண்டு நினைவுரை ஆற்றுகையிலேயே அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

அவர் அங்கு தொடர்ந்து உரையாற்றுகையில், விடுதலைப் புலிகளால் முன்வைக்கப்பட்ட இடைக்கால திட்டவரைபு உலக நாடுகளில் இல்லாத ஒன்றல்ல. அதற்கு எதிராக அரசினால் முன்வைக்கப்படும் மாற்று யோசனைகளை ஏற்றுக்கொள்ளமுடியாது காலத்தை இழுத்தடித்து யுத்தத்திற்கான ஏற்பாட்டை ஜனாதிபதி மேற்கொண்டு வருகின்றார் என்றார்.

தேசிய நல்லிணக்கச் சபை என்று ஒரு ஏமாற்று யுக்தியை ஜனாதிபதி கையாளுகின்றார். இது காதில் பூச்சுற்றும் செயற்பாடு. பெரும்பான்மை இனம் விரும்பும் தீர்வையே நாமும் விரும்புவதாக ஜனாதிபதி கூறுகிறார். ஆனால் நாம் விரும்பும் தீர்வே எமக்குவேண்டும். பேரினவாத சக்தி

(12 ஆம் பக்கம் பார்க்க)

# பெண்கள் எழுச்சிநாளை முன்னிட்டு கிளிநொச்சியில் இன்று மாபெரும் ஆயுதக் கண்காட்சி ஆரம்பம்

(கிளிநொச்சி)

தமிழீழ பெண்கள் எழுச்சி நாள், 2 ஆம் லெப். மாலதியின் நினைவுநாள் ஆகியவற்றை முன்னிட்டு விடுதலைப் புலிகளின் மகளிர் படையணிகளின் ம்ாபெரும் கண்காட்சி நிகழ்வுகள் இன்று கிளிநொச்சி பொது மைதானத்தில் ஆரம்பமாகவுள்ளன.

இன்று ஆரம்பமாகும் இக் கண்காட்சி எதிர்வரும் 10 ஆம் திகதிவரை நடைபெறவுள்ளது. இன்று காலை 9 மணிக்கு பொதுச் சுடரேற்றல், தேசியக் கொடியேற்றல் என்பனவற்றுடன் ஆரம்பமாகும் இந்நிகழ்வில் 2 ஆம் லெப். மாலதியின் திருவுருவப் படத்திற்கு அவரது தந்தையார் ஈகச் சுடரேற்றி மலர்மாலை அணிவிப்பார். தொடர்ந்து கண்காட்சி மண்டபம் திறந்து வைக்கப்படும்.

பகுதி பகுதியாக ஆரம்பமாகும் இக் கண்காட்சியில் தாயக விடுதலைப் போராட்டத்தை சித்திரிக்கும் ஒளிப்படங்களின் காட்சிகள் காண்பிக்கப்படவுள்ளன. தமிழீழ விடுதலைப் போராட்டத்தில் பயன்படுத்தப்படும் போராயுதங்கள் இங்கு காட்சிக்கு வைக்கப்படவுள்ளன. இவற்றில் போராட்டத்தில் ஆயுதங்கள் கைப்பற்றப்பட்ட, பெறப்பட்ட வரலாறுகள் குறிப்பிடப்பட்டிருக்கும். வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த ஆயுதங்களும் காட்சியில் இடம்பெறும். அத்துடன் விடுதலைப் போராட்டத்தில் போராளிகளால் உருவாக்கப்பட்ட பசீலன் பீரங்கி உள்ளிட்ட போராயுதங்களும் காட்சிக்கு

(12 ஆம் பக்கம் பார்க்க)

# செஞ்சிலுவைச் சங்கப் பிரதிநிதிகள் தமிழ்ச்செல்வனுடன் நேற்று சந்திப்பு

(ஜெனிவா)

தமிழீழ விடுதலைப் புலிகளின் அரசியற்துறைப் பொறுப்பாளர் சு.ப. தமிழ்ச்செல்வனுக்கும் ஆசிய பிராந்தியத்திற்கான சர்வதேச செஞ்சிலுவைச் சங்கப் பிரதிநிதிகளுக்கும் இடையிலான கலந்துரையாடல் நேற்று சுவிஸ்லாந்தில் நடைபெற்றது.

இச் சந்திப்பின்போது பல்வேறு விடயங்கள் குறித்தும் மனித உரிமை பேணல் பற்றியும் கலந்துரையாடப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது. இதேவேளை, தாயகத்திலிருந்து சென்ற மனித உரிமைகள் அமைப்புப் பிரதிநிதிகளுக்கு, சர்வதேச மனித உரிமைகள் செயற்பாட்டாளரான ஹரிஜின் பயிற்சிப் பட்டறை ஒன்றை நடத்தினார். சுவிஸ்லாந்தின் ஜெனிவாவில் உள்ள நோர்வே பணியகத்தில் இச் சந்திப்பு நடைபெற்றுள்ளது.

(ச)

## வலம்புரியின் அனுசரணையுடன்
## வட்டுக்கோட்டை - சங்கரத்தை பாலன் மில் உரிமையாளர்
## இராசையா சோமசுந்தரம் அவர்களின் ஞாபகார்த்தமாக நடாத்தப்பட்ட
# கவிதைப்போட்டி - 2004 முடிவுகள்

**1ஆம் பரிசு - தங்கப் பதக்கம்**

**திரு. முத்தையா திருநாவுக்கரசு** — 127/7 கோவில்வீதி, யாழ்ப்பாணம்.

**2ஆம் பரிசு - வெள்ளிப் பதக்கம்**

**செல்வன். அருமைத்துரை யசீகரன்** — கோண்டாவில் வடக்கு, கோண்டாவில்.

**3ஆம் பரிசு - வெண்கலப் பதக்கம்**

**செல்வன். நவரத்தினம் பிரேமசீலன்** — கோண்டாவில் வடக்கு, கோண்டாவில்.

## பரிசு பெறுபவர்கள் விபரம்

| | |
|---|---|
| 01.செல்வன்.கணேசன் சேந்தன் | 14/2, அன்னசத்திர ஒழுங்கை, கந்தர்மடம், யாழ்ப்பாணம். |
| 02.செல்வி.தாட்ஷாயினி இலகங்கநாதன் | உயரப்புலம், ஆனைக்கோட்டை. |
| 03.திரு.வயிரமுத்து சின்னப்பா | தாமோதரம்பிளளை வீதி, சங்கத்தானை, சாவகச்சேரி. |
| 04.செல்வி.சின்னக்கண்டு சுசீலாதேவி | காட்டுப்புலம், தொண்டமனாறு. |
| 05.திரு.சிற்றம்பலம் சிவஞானராஜா | ஆனைக்கோட்டை வீதி, கொக்குவில் மேற்கு, கொக்குவில். |
| 06.செல்வன்.எம்.சுழியன் (புனைபெயர்) | இல.57,கோவில் வீதி, யாழ்ப்பாணம். |
| 07.செல்வன்.நிற்சிங்கராஜா சயந்தன் | மந்துவில் வடக்கு, கொடிகாமம். |
| 08.செல்வி.சத்தியகுமார் வாசுகி | 26,கலைமகள் வீதி, அரியாலை மேற்கு, யாழ்ப்பாணம். |
| 09.திரு.இராஜா ஜெயக்குமார் | சிவன் வீதி, உரும்பிராய் கிழக்கு, உரும்பிராய். |
| 10.செல்வி.தாட்ஷாயினி குலசிங்கம் | 73/1கலட்டி அம்மன் வீதி, யாழ்ப்பாணம். |

## சான்றிதழ் பெறுவோர்

| | |
|---|---|
| திருமதி.ஜெயந்தாதேவி கோடீஸ்வரநாதன் | கால்நடை வைத்தியசாலை, யாழப்பாணம். |
| திரு.மகேந்திரன் திருவரங்கன் | வட்டு.தென்மேற்கு, வட்டுக்கோட்டை. |
| திரு.ஐயாத்துரை குமரதாசன் | 59, கலைமகள் வீதி, அரியாலை. |
| திரு.வேலாயுதம் அகிலன் | 'புஸ்ப இல்லம்' வதிரி,கரவெட்டி வடக்கு, கரவெட்டி. |
| செல்வி.விஜிதா பூபாலசிங்கம் | ஐயா கடையடி, சாவக்ச்சேரி வடக்கு, மீசாலை. |
| செல்வன்.சந்திரகுமார் சதீஸ்குமார் | 7ம் வட்டாரம், புதுக்குடியிருப்பு. |
| திரு.இராசநாயகம் ஷாம்குமார் | சுதுமலை வடக்கு, மானிப்பாய். |
| திரு.கதிர்காமு ரட்ணேஸ்வரன் | 5, பெனடிக் கோஸ் ஒழுங்கை, கணடி வீதி, யாழ்ப்பாணம். |
| செல்வி.ஞானப்பிரியா சிவசிதம்பரலிங்கம் | யா/வேம்படி மகளீர் கல்லூரி, யாழ்ப்பாணம். |
| திருமதி.அமிர்தாம்பீகை வெளளியங்கிரிநாதன் | கற்பகப் பிள்ளையார் லேன், கோப்பாய் தெற்கு, கோப்பாய். |
| செல்வி.நளாயினி பூபாலசிங்கம் | 62/01 அன்னசத்திர ஒழுங்கை, கந்தர்மடம். |
| திரு.வே.இளையகுட்டி | மணற் பகுதி, புத்தூர். |
| திரு.கே.எஸ்.தர்மகுலசிங்கம் | 481, பார் வீதி, மட்டக்களப்பு. |
| திரு.முத்துக்குமாரு பாலசுப்பிரமணியம் | மந்துவில் மேற்கு, கொடிகாமம். |
| செல்வன்.சிங்கராஜா யனூபன் | 154/14, ஆத்திசூடி வீதி, கந்தர்மடம், யாழ்ப்பாணம். |
| செல்வி.முருகையா சுதா | 2ம் மதவடி ஒழுங்கை, முல்லை வீதி, பரந்தன். |
| செல்வன் ஆ.ஜென்சன் றொனால்ட் (சூரியநிலா) | 27/9, 1ம் ஒழுங்கை, ஈச்சமோட்டை, யாழ்ப்பாணம். |
| செல்வன்.தியாகராஜா சுதர்மன் | 'திருமகள் இல்லம்' இல.27 மெமோறியல் லேன், மானிப்பாய். |
| செல்வி.மதியரசி தெட்சணாமூர்த்தி | மாடந்தை, வல்வெட்டி, வல்வெட்டிததுறை. |
| திரு.குழந்தைவேலு சோமசுந்தரம் | சந்தை ஒழுங்கை, சுதுமலை வடக்கு, மானிப்பாய். |
| திரு.சுந்தரம் சுந்தரலிங்கம் | கல்லூரி வீதி, புலோலி மத்தி, பருத்தித்துறை. |
| திரு.சின்னத்தம்பி கந்தசாமி | உப்புக்கேணியடி, கச்சாய் வீதி, சாவகச்சேரி. |
| செல்வன். நவரெத்தினம் மோகனரூபன் | 5ஆம் வட்டாரம், நயினாதீவு. |
| திரு.வல்லிபுரம் சிவாஜி | தேனூர், கரணவாய் கிழக்கு, கரவெட்டி. |
| திரு.சந்திரன் செல்வகுணச்சந்திரன் | மின்சாரநிலைய அருகு ஒழுங்கை, ஓடக்கரை, பருத்தித்துறை. |
| செல்வி.சுகந்தினி முருகேசு | பிள்ளையார் கோவிலடி, அச்சுவேலி தெற்கு, அச்சுவேலி. |
| செல்வி.கிருஷணமூர்த்தி விஜயலதா | மிருசுவில் வடக்கு, மிருசுவில். |
| திரு.கதிர்த்தம்பி சிவானந்தம் | 'அன்பகம்', தொம்பை வீதி, சுன்னாகம். |
| திரு.இரத்தின சபாபதி குலசிங்கம் | 5ஆம் வட்டாரம், நயினாதீவு. |
| செல்வி.சுகிர்தா செகராசசேகரம் | அராலி வீதி, சங்கானை. |
| செல்வி.சகாயமேரி விசுவாசம் | சிவசக்தி கோவிலடி, அச்சுவேலி தெற்கு, அச்சுவேலி. |
| செல்வி.மீனலோஜினி அருணாசலம் | கிராம்புவில், சாவகச்சேரி. |
| செல்வி.சிவனேசன் விஜிதா | கட்டுக் கொம்பரை, அல்வாய் கிழக்கு, அல்வாய். |
| செல்வி.பிரேமினி சபாரத்தினம் | பெரிய அரசடி வீதி, சங்கத்தானை, சாவகச்சேரி. |
| செல்வி.சிந்துஜா செபமாலைதாசன் | 20.B.A தம்பிலேன், வண்ணார்பண்ணை, யாழ்ப்பாணம். |
| செல்வி.துஷ்யந்தி மகேந்திரன் | புத்தூர் மேற்கு, நவக்கிரி. |
| திரு.கு.தியாகராஜ சர்மா | நீர்வேலி வடக்கு, நீர்வேலி. |
| செல்வி.கவிதா முருகையா | கட்டைப்பிராய், வட்டக்குளம், யாழ்ப்பாணம். |
| செல்வன்.பெரியதம்பி ஐங்கரன் | புலோலி தெற்கு, புலோலி. |
| திரு.குமாரசாமி கண்ணதாசன் | வரியப்புலம், சுன்னாகம். |
| செல்வன்.பொன்னுத்துரை அன்பரசன் | 4ஆம் வட்டாரம், நயினாதீவு. |
| செல்வன்.சிவபால தருமகுலசிங்கம் மதியழகன் | பாண்டின் சீமா, அல்வாய் வடமேற்கு, அல்வாய். |
| பிரம்மஸ்ரீ கணபதிசுவாமிக்குருக்கள் சுதர்சனக்குருக்கள் | சிவன்கோவிலடி, ஆவரங்கால், புத்தூர். |
| செல்வி.நிர்மலநாதன் சாமினி | 21, லோட்டஸ்றோட், ஆனைக்கோட்டை. |
| செல்வன்.இராசதுரை சிறீதரன் | சுழிபுரம் தெற்கு, சுழிபுரம். |
| திரு.வைரவன் சசிகுமார் | கச்சாய் வீதி, சாவகச்சேரி. |
| செல்வி.மூத்துக்குமாரசாமி லோஜினி | நெடுந்தீவு கிழக்கு, நெடுந்தீவு. |
| செல்வி.உமாயினி முருகேசு | சம்மந்தர் கடையடி, கரவெட்டி மத்தி, கர்வெட்டி. |
| சபாநாதன் பாரதி | மே/பா திரு.பொ.தவயோகராஜா அம்மையர் தோட்டம், உடுவில் கிழ, சுன்னாகம். |
| திரு.குமாரசாமி சண்முகரத்தினம் | பாரதிலேன், சங்கானை. |
| செல்வன்.யோகானந்தா மகிழ்னன் | 130/1 பருத்தித்துறை வீதி, யாழ்ப்பாணம். |
| செல்வி.ராதிகா முருகையா | யா/இந்து மகளீா கலலூரி, யாழ்ப்பாணம். |
| திரு.சண்முகம் தணிகாசலம் | 'வேளாவை' அளவெட்டி வடக்கு, அளவெட்டி. |
| செல்வி.குகதர்சினி பாலசுப்பிரமணியம் | 62/1அன்னசத்திர ஒழுங்கை, கந்தர்மடம். |
| செல்வன்.சரவணை கருணாகரன் | நீர்வேலி வடக்கு, நீர்வேலி. |
| செல்வி.டயஷா தர்மகுலசிங்கம் | மே/பா எஸ்.பன்னீர்ச்செல்வம், உடையார் ஒழுங்கை, கொக்குவில் கிழக்கு, கொக்குவில். |
| திருமதி.அகஸ்ரின் பெனடிக்றராதா | இல.16, ஜஸ்.பிளான்ற் வீதி, குருநகர். |
| செல்வன்.ஜோன்சென் ஜோஜ் ஜோன்சன் | 4ஆம் வட்டாரம் புதுக்குடியிருப்பு. |
| செல்வன்.சோமசுந்தரம் கிருஷ்ணதாஸ் | சந்தை முன் ஒழுங்கை, புது மதவடி, சுதுமலை வடக்கு, மானிப்பாய். |
| செல்வி.சிவலோஜினி சிவராசா | குட்டியப்புலம், வயாவிளான். |
| திரு.அ.அருளம்பலம் | சென்.செபஸ்தியார் வீதி, கோண்டாவில் கிழக்கு, கோண்டாவில். |
| செல்வி.சிவகுரு நந்தினி | உசன், மிருசுவில். |
| செல்வன்.முத்துச்சாமி றஜீஸ் | உடுவில் வீதி, மானிப்பாய. |
| செல்வன்.அன்ரனி யூட்லியோன் | இல.15, அடம்பன் வீதி, 1ஆம் ஒழுங்கை, யாழ்ப்பாணம். |
| செல்வன்.இராசசிங்கம் ஸ்ரீதரன் | 3ஆம் வருடம், கலைப்பீடம், யாழ்.பல்கலைக்கழகம். |
| செல்வி.அங்கீதா சுப்பிரமணியம் | யா/திருக்குடும்ப கன்னியார் மடம். |
| திரு.கணபதிப்பிள்ளை சுசீதரன் | இந்து இளைஞர் மன்றத்தடி, ஆவரங்கால் மேற்கு, புத்தூர். |
| செல்வன.ஜெகராசா சசீந்திரன் | 658/8, கே.கே.எஸ்.வீதி, நாச்சிமார் கோவிலடி, யாழ்பபாணம். |
| திருமதி.கிருஷ்ணபாரதி சிவகுமாரி | 'திகிரி',புலோலி கிழக்கு, பருத்தித்துறை. |
| செல்வன்.சி.செந்தூரன் | விதர்சன் அழகு மாடம், சுன்னாகம். |
| செல்வன்.சந்திரசேகரம் துர்க்கேஸ்வரன் | சின்னக்கிழக்கூர், வட்டு.கிழக்கு, வட்டுக்கோட்டை. |
| திரு.தம்பிராசா பரமலிங்கம் | 'மூலபாரதி' நாவலடி ஒழுங்கை, வண் - வடமேற்கு, யாழ்ப்பாணம். |
| செல்வி.சிவதுர்க்கா சிவசுப்பிரமணியசர்மா | அராலிமேற்கு, வட்டுக்கோட்டை. |
| திரு.கந்த.தியாகராசா | ஆலடி வீதி, கோண்டாவில் கிழக்கு, கோண்டாவில். |
| திரு.சிவரத்தினம் சண்முகவடிவேல் | ஏழாலை மேற்கு, சுன்னாகம். |
| செல்வன்.கணேசன் விஜயன் | அம்பிகை ஸ்ரோஸ், மாவடி, வட்டுக்கோட்டை. |
| செல்வன்.தங்கவேலு பால்ராஜ் | கலப்னாவத்தை ஒழுங்கை, தும்பளை, பருத்தித்துறை. |
| செல்வி.பிரதா ம்ருகையா | ஸ்ரீ வாகீஸ்வரி வீதி, கோண்டாவில் வடகசு. |
| செல்வி.மணிமேகலை குமாரசாமி | இல.276, சில்வா வீதி, வட்டக்கச்சி, கிளிநொச்சி. |
| செல்வன்.தங்கராஜா செல்வகுமார் | குப்பிளான் தெற்கு, ஏழாலை. |
| செல்வி.சோபிகா ஸ்ரீஜீவா | மூளாய் வீதி, வட்டுக்கோட்டை. |
| திரு.கந்தன், திருவம்பலம் | 45,பூங்கா வீதி, குருநகர், யாழ்ப்பாணம். |
| திரு.சதாசிவம் பத்மநாதன் | 'சிவபதி', சிறுப்பிட்டி வடக்கு, நீர்வேலி. |
| எட்வின் அரசரட்ணம் எடின் அரிக்ஷன் | 'வனிதாவாசம்', உடுவீல் கிழக்கு, சுன்னாகம். |
| திரு.கந்தசாமி கனகராசா | 535, பருத்தித்துறை வீதி, நல்லூர். |
| செல்வன்.தவச்செல்வம் பிரதீஸ் | கொத்தியாவத்தை மேற்கு, சுன்னாகம். |
| செல்வி.மகாலிங்கம் தாரணி | பி.மன்மோகன், வரியப்புலம், சுன்னாகம். |
| செலவி.செநதூரா ஜெகதஸ்வரக்குருககள் | இல.1,பிறவுண் வீதி, யாழ்ப்பாணம். |
| திருமதி.சியாமளா யஸ்ரஸ் | 06, பிளைச்சஸ் லேன், சுண்டுக்குளி. |
| செல்வி.மேரிநிஷா இந்திரகுமார் | 256/7 தொடர்மாடி அருகாமை, குருநகர். |
| செல்வி.பாலசுபபிரணியம் பத்மசிலோஜினி | சத்தியகாட்டு மார்க்கட், சுழிபுரம் கிழக்கு, சுழிபுரம். |

(05 ஆம் பக்கம் பார்க்க...)

# உலகம் போற்றும் உத்தம குருவின் இணையடி தம்மை ஏத்தித் துதிப்போம்

## மாணவர் நலமே கண்ணானார்

சோலையில் மலரும் பூக்களே
காலை கல்லூரி வாருங்களே
மாலையாக மாறுங்களே எங்கள்
மனித தெய்வங்களே ஆடுங்களே

தன்நலம் சிறிதும் இல்லார்
மாணவர் நலமே கண்ணானார்
சந்தனம் போலே தேய்ந்தார்
சமூகம் வாழ ஓயாதுழைத்தார்

நீர்வை இரதி

## பவணந்தியார் பார்வையில் நல்லாசிரியர்

குலனருள் தெய்வம் கொள்கை மேன்மை
கலை பயில் தெளிவு கட்டுரை வன்மை
நிலமலை நிறைகோல் மலர் நிகர் மாட்சியும்
உலகியல் அறிவு உயர் குணம் இனையவும்
அமைபவன் நூல் உரை ஆசிரியன்னே!

## ஊராரின் பாலகரை ஊட்டி வளர்க்கின்றீர்

எக்காலும் எவ்விடத்தும் எல்லோரும் ஏற்றுகின்ற
தக்கோரே ஆசிரியச் சான்றோரே-முக்காலும்
ஊராரின் பாலகரை ஊட்டி வளர்க்கின்றீர்
சீராக வாழுமும் சேய்

அரும்பிடும் ஆற்றலை அன்புடன் தூண்டிப் பேரார்வமுடன்
உருக் கொளச் செய்ததை ஓங்கிடும் பாதையில்
ஓடவைத்தே
கருமங்களைக் கண்ணியத்துடன் செய்திடும் கற்பினரை
விரும்பியே வார்த்திடும் வேந்தனாம் ஆசான் விழுமியனே

தேசாபிமானமும் தெய்வாபிமானமும் சேர்ந்திலங்க
ஆசா பாசங்களின் ஆட்சியை வீழ்த்திடும் ளஆழுமையால்
பேசாமல் வாழ்வின் பெரும் பண்புக் கோலங்கள்
பேணுவதால்
ஆசான்கள் இந்த அகிலத் தெழிலின் அடித்தளமே

சிற்பி

## இதய வாழ்த்துக்கள்!

கல்வி எனும் கடலை கடப்பதற்கு
கரம் கொடுத்தவரே
கல்லூரி சென்று பட்டம்பெறுவதற்கு
வழியமைத்தவரே
கலைகள் பல பயின்று கல்வி மானஆவதற்கு
உறுதுணை புரிந்தவரே
உத்திகள் பல அறிந்து உத்தமராய் வாழ
ஊக்கமளித்தவரே
ஒழுக்கம் எனும் பண்பை ஒவ்வொருவரும் அறிந்திட
ஒத்தாசை புரிந்தவரே
தமிழ் மொழியுடன் பலமொழிகள் தந்தவரே
தந்தோமே இதய வாழ்த்துக்கள்

த.இதயானந்த் முல்லைத்தீவு.

## வாழ்க ஆசான்கள்

அறிவை அறிவால்
அறியும் அறிவே
ஆசான் என்ற
அர்த்தத்திற்கு அர்த்தம்
சொல்லுவது
ஐப்பசி ஆறாம் திகதி
அன்பால் அறிவூட்டி
அறிவுப் பசியைப் போக்கி
அன்றாடம் பாடுபட்டு
அவனியல் எம்மை
அறிவாளியாய்ப் பார்க்க
ஆசைப்பட்டு உழைப்பவர்
ஆசானே
சிகரத்தில் ஏற்றிவைக்க
ஏணியாய் நிற்பவரும்
பகலிரவாய் படிக்கவைத்து
பட்டம்பல பெறப்பாடுபட்டு
பாரில் எம்மை உயர்த்தும்
தெய்வங்களே
எம் உள்ளங்களில் வாழும்
ஆசான்களே
என்றும் வாழ்க! வாழ்க!

எஸ்.சிவதுர்க்கா

## உயிரில் உறைந்த ஆசிரியம்

அறிவின் தொடக்கம்
ஆற்றலின் வடிவம்
இன்பத்தின் இருப்பிடம்
ஈகையின் சிகரம்
உயர்வின் உச்சம்
ஊக்கத்தின் துணை
எழுச்சியின் வாய்க்கால்
ஏற்றத்தின் ஏணி
ஐயத்தின் திறவுகோல்
ஒழுக்கத்தின் உயர்வு
ஓர்மத்தின் உருவம்
ஔடதமாய் தீர்ப்பு

அ.மனோகரன்

## வாழ்த்துக்குரிய தெய்வங்கள்

ஆசிரியராய் வாழ்கின்ற அர்த்தங்களே
அகங்களை ஆள்கின்ற அற்புதங்களே
வீசியெழும் தென்றலின் விவேகங்களே
வாழ்த்தி வணங்கும் வெளிச்சங்களே

தமிழ் தந்த தங்கக் கலசங்களே
தாழ்கள் பற்றி வணங்குகின்றோம்
அமிழ்தென வாழ்விற்கும் அற்புதங்களே
அடிகள் நாளும் வணங்குகின்றோம்

பூ.புலேந்திரராஜா

## வணக்கத்துக்குரிய தெய்வங்கள்

நவயுக தத்துவங்கள் ஆள்கின்ற செல்வங்களே
நமக்கு கல்வியை ஊட்டிய தெய்வங்களே
தேனான மொழியை வளர்த்த தென்றல்களே
தேசம் நிமிர்ந்திட உழைத்த குன்றங்களே

பூக்கள் தூவி கால்களை வணங்குகின்றோம்
பூமியின் கிரீடம் சூட்டி வாழ்த்துகின்றோம்!
பாக்கள் பாடி உலகத்தில் மகிழ்கின்றோம்
பாரினில் உயர்ந்திட ஆசிரியர்களை ஏத்துகின்றோம்.

பு.திலீப் காந்த்

## அஞ்சலி செலுத்துவோம்!

ஆலயங்கள் இன்றி ஆராதிக்கப்படும்
தெய்வங்கள் ~ அவர்கள்
ஆதவனுக்கு நிகரான அறிவுக்குன்றுங்கள்!
ஆன்மாவை ஆகுதியாக்கும் தெய்வங்கள் ~அவர்கள்
பிறருக்காகத் தம்மையே யழிக்கும் மெழுகுவர்த்திகள்!
ஆதியும் அந்தமும் அற்ற
தெய்வங்கள் ~ அவர்கள்
அனிதரும் கற்பக விருட்சங்கள்!
ஆண்டுக்கொரு தினம் அவர்தாள்களுக்கு
அஞ்சலி செலுத்துவோம் அவர் சேவைகட்கு!

காந்தன் இராமாவில்

## பொது அமைப்புப் பிரதிநிதிகளுடன் யாழ்.இராணுவத்தளபதி இன்று சந்திப்பு

(திருநெல்வேலி)

யாழ்.மாவட்ட இராணுவக் கட்டளைத் தளபதி மேஜர் ஜெனரல் சுனில் தென்னக்கோனுக்கும் யாழ். மாவட்டப பொது அமைப்புக்களின் பிரதிநிதிகளுக்கும் இடையிலான முக்கிய சந்திப்பொன்று இன்று புதன்கிழமை மு.ப.10.00 மணிக்கு யாழ்.மாவட்ட அரச சார்பற்ற நிறுவனங்களின் இணையக் காரியாலயத்தில் நடைபெறவுள்ளது.

இராணுவ உயர் பாதுகாப்பு வலயப் பிரதேசங்கள், குடாநாட்டு மக்கள் எதிர்நோக்கும் பல்வேறு பிரச்சினைகள் ஆகியன குறித்து இச் சந்திப்பின் போது கலந்துரையாடப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது.

மேற்படி சந்திப்பில் யாழ்.மாவட்டத்திலுள்ள பொது அமைப்புக்கள் மற்றும் அரச சார்பற்ற நிறுவனங்களின் பிரதிநிதிகளும், இராணுவக் கட்டளைத் தளபதி உட்பட இராணுவ அதிகாரிகள சிலரும் கலந்துகொள்ளவுள்ளனர். (ந-43,5,19)

## ஆன்மீகச் சொற்பொழிவு

இந்துசமய விவகார அலுவல்கள் திணைக்களத்தின் யாழ்மாவட்ட அலுவலகம் பிரதி வெள்ளிக்கிழமைகளில் நல்லூர் நாவலர் மணிபண்டபத்தில் பி.ப.6.30மணிக்கு நடாத்திவரும் ஆனமீக சொற்பொழிவில் எதிர்வரும் 8ஆம் திகதி 'இந்து தத்துவம்' எனும் விடயம் பற்றி வயாவிளான் மத்திய மகா வித்தியாலய ஆசிரியர் ம.சுதர்சனின் சிறப்புச் சொறபொழிவு இடம்பெறவுள்ளது. (ந)

## வாகரையில் துப்பாக்கிச் சூடு ஒருவர் உயிரிழப்பு

மட்டக்களப்பு மாவட்டம் வாகரைப் பிரதேசத்தில் ஓமடியாமடு கிராம அபிவிருத்திச் சங்கத் தலைவர் ஒருவர் நேற்று முன்தினம் இரவு அவரது வீட்டில் வைத்து இனந்தெரியாத நபர்களினால் சுட்டுக்கொலலப்பட்டுள்ளார்.

மட்டக்களப்பு-பொலன்னறுவை மாவட்ட எல்லைக் கிராமமான ஓமடியாமடுவில் இடம்பெற்ற இந்தச்சம்பவத்தில் வண்ணமணி தர்மராஜ (வயது 40) என்பவரே கொல்லப்பட்டவராவார் இச்சம்பவத்துடன் தேச விரோத சக்திகளுக்கு தொடர்பு இருக்கலாம் என அக்கிராம மக்கள் தெரிவித்துள்ளனர்.

இத் துப்பாக்கிச் சூட்டுச் சம்பவத்துடன், தொடர்புடைய நபர்கள் எவரும் இதுவரை அடையாளம் காணப்படவில்லை.

நேற்று முன்தினம் இரவு அவரது வீட்டிற்குச் சென்ற ஆயுதபாணிகள் சிலரே இந்தத் துப்பாக்கிப் பிரயோகத்தை செய்துவிட்டு தப்பிச் சென்றுள்ளார்கள். இதுகுறித்த விசாரணைகளை பொலிஸார் மேறகொண்டு வருகின்றனர். கொல்லப்பட்டவரின் சடலம் வாழைச்சேனை வைத்தியசாலையில் ஒப்படைககப்பட்டுள்ளது. (ந)


## வடக்கு-கிழக்கு அநாதைச் சிறாருக்கு உதவுமாறு கனேடிய வைத்தியர் கோரிக்கை

இலங்கையின் வடக்கு - கிழக்கு மாகாணங்களில் வாழும் அனாதைச் சிறுவர்களுக்கு உதவி வழங்குமாறு கனடா ரொறன்ரோவைத் தளமாகக் கொண்ட தமிழ் வைத்தியர் ஒருவர் கோரிக்கை விடுத்துள்ளார்.

வடக்கு - கிழக்கின் புனர்வாழ்வு மையங்களில் வாழும் சிறார்களுக்குப் பொதுமக்கள் மருத்துவ உதவிகளை வழங்கவேண்டும் என ரொறன்ரோவில் உள்ள தமிழ் வைத்தியர், வைத்திய கலாநிதி சண்முகம் சிறீதேவா கோரிக்கை விடுதுள்ளார்.

இந்த விடயம் குறித்து கனடாவில் இயங்கும் மருத்துவ உதவிப் பொது அமைப்புக்களுக்குக் கடிதம் எழுதியுள்ளதாகத் தெரிவித்துள்ள வைத்திய கலாநிதி சிறீதேவா, அவர்களிடமிருந்து இந்த விடயத்தில் சாதகமான பதில்கள் எதுவும் இதுவரை கிடைக்கவில்லையென கவலை தெரிவித்துள்ளார். (ந)

# உலக அரை மரதன் ஓட்டப்போட்டி
# கென்ய வீரர், சீன வீராங்கனை முதலிடம்



டெல்லியில் நடைபெற் ற உலக அரை மரதன் போட்டியின் ஆடவர் பிரிவில், கென்யாவைச் சேர்ந்த 24 வயது வீரர் போல் கிருயி, கடந்த ஆண்டு வெள்ளிப்பதக்கம் வென்ற தன்சானியா வீரர் ஜோசப் பேபியானாவை மிகக் குறைந்த விநாடிகளில் தோற்கடிதது சம்பியன் பட்டத்தைக் கைப்பற் றினார். மூன் றாம் இடத்தை கடார் வீரர் அப்துல்லா ஹசன் பெற்றார்.

புதுடில்லியில் கடந்த ஞாயிற்றுக்கிழமை நடைபெற்ற 13ஆவது சர்வதேச அரை மரதன் போட்டியில் கென்ய வீரர் போல் கிருபி



ஆடவர் பிரிவிலும், சீன வீராங்கனை யிஞ்சீ சன் மகளிர் பிரிவிலும் சம்பியன் பட்டத்தை வென்றுள்ளனர்.

அவர்களுக்கு தலா 15 லட்சம் ரொக்கப் பரிசு வழங்கப்பட்டது.

64 நாடுகளில் இருந்து பலர் பங்கேற்ற விறுவிறுப்பான இப்போட்டியில் முன்னிலை வீரர்கள் பின்னடைவு பெற்றது. சுவாரஸ்யமானதாகும்.

ஆடவருக்கான போட்டியில் முதலிடம் யாருக்கு என்பதை இலத்திரனியல் கடிகாரத்தினால் துல்லியமாக கணிக்க முடிந்தது. முதல் 5 இடங்களைப் பெற்றவர்கள் மிகவும் நெருக்கமாகவே 21 கிலோ மீற்றர் இலக்கைக் கடந்தனர்.

அதில் கடந்த ஆண்டு போட்டியில் வெள்ளிப் பதக்கம் வென்ற தன்சானிய வீரர் ஜோசப் பேபியானாவை மிகக் குறைந்த வினாடிகள் வித்தியாசத்தில் தோறகடிதது பட்டத்தைக் கைப்பற்றினார். கென்யாவைச் சேர்ந்த 24 வயது வீரர் போல் கிருயி.

இவர் 1 மணி 2நிமிடம் 15 விநாடிகளில் ஓடி முடித்து முதலிடத்தைப்பெற்றார். அவரைவிட கூடுதலாக 16 விநாடிகள் எடுததுக கொண்டார் 2ஆம் இடத்தைப்பெற்ற பேபியானா. மூன்றாமிடம் பெற்ற கடார் வீரர் அப்துல்லா ஹசன் 1 மணி 2நிமிடம் 36 வினாடிகள் எடுத்துக்கொண்டார்.

மகளிர் பிரிவில் 27வயதாகும் சீன விராங்கனை யிஞ்சீ சன் 1 மணி 08 நிமிடம் 40 வினாடிகளில் இலக்கை எட்டி முதலிடம் பெற்றார். கென்ய வீராங்கனை லிடியா செரோமி 2 ஆம் இடத்தையும் ருமேனிய வீராங்கனை கொன்ஸ்டன்டினா திதா 3ஆம் இடத்தையும் பெற்றனர்.

பட்டம் வெல்வார் என மிகவும் எதிர்பார்க்கப்பட்ட அயர்லாந்து வீராங்கனை சோனியா ஒஷ்சுல்லிவன் நான்காவது இடததையே பிடிக்க முடிந்தது. ஆடவர் பிரிவில் இந்தியாவிலிருந்து குறிப்பிடும்படியான வீரர்கள் பங்கேற்றாலும் ராம் பஹதூர் சுப்பர்வால் 59ஆவது இடத்தையே பெறமுடிந்தது. (ப-7)

# 267 கோல்கள் அடித்த அப்பாஸ்
# உலக சாதனையை சமன் செய்தார்

அதிக கோல் அடித்த உலக சாதனையை சமன் செய்திருக்கிறார் பாகிஸ்தானின் ஹொக்கி வீரரான சோகைல் அப்பாஸ்.

இந்தியாவுக்கும் பாகிஸ்தானுக்கும் இடையே நேற்று முன்தினம் நடைபெற்ற 5வது போட்டியில் இரண்டு கோல்களை அடித்ததன் மூலம் உலக சாதனையை அப்பாஸ் சமன் செய்திருக்கிறார். தற்போது 267 கோல்களை அடித்து நெதர்லாந்தின் போல் லிட்ஜென்ஸின் சாதனையையே அவர் சமன் செய்துள்ளார்.

இப் போட்டியிலேயே உலக சாதனையை முறியடிக்க அவருக்கு வாய்ப்புகள் இருந்தபோதும் இந்திய கோல்-கீப்பர் ஆ்ரின் டிசௌசா மிகச் சிறப்பாக தடுத்து நிறுத்தி அந்த வாய்ப்பை இல்லாது செய்துவிட்டார்.

இந்தியாவுடனான இத் தொடரில் நடைபெற்ற 5 ஆட்டங்களில் இதுவரை 7 கோல்களை அப்பாஸ் போட்டுள்ளார். இச் சாதனையை சமப்படுத்தியது தொடர்பாக அப்பாஸ் கருத்துத் தெரிவிக்கையில், லிடஜென்ஸின் சாதனையை நான் சமன் செய்திருந்தாலும் அவருடன் என்னை ஒப்பிடக்கூடாது. நான் இன்னும் கற்றுக்கொள்ள நிறைய இருக்கிறது என்றார்.

29 வயதாகும் அப்பாஸ் 1998 ஆம் ஆண்டில்தான் சாவதேசப் போட்டிகளில் அறிமுகமானார். ஒரே ஆண்டில் 60கோல்களை அடித்த வீரர் இவர். மிக விரைவாக 100 கோல்கள் 200 கோல்களை அடித்த வீரர் என்ற பெருமையும் இவருக்கு இருக்கிறது.

இதுவரை 210 போட்டிகளில் விளையாடியுள்ள அப்பாஸ், பெனால்டி கோணர் நிபுணர் என்பது குறிப்பிடத்தக்கது. (ப-7)

# நைஜீரிய டென்னிஸ் போட்டி
# சானியாவுக்கு முதல் வெற்றி

நைஜீரியாவில் நடைபெறும் டென்னிஸ் சர்க்யூட் போட்டியின் 2 ஆவது சுற்றுக்கு இந்தியாவின் சானியா மிர்சா தகுதி பெற்றுள்ளார்.

17 வயதாகும் சானியா முதல் சுற்றில் ஆர்மீனியாவின் நிகோயியன் லூத்மிலாவை 6-1,6-2 என்ற செட்களில் வென்றுள்ளார்.

கடந்த மாதம் லெபானானில் நடைபெற்ற போட்டியிலும் மிகச் சிறப்பாக விளையாடிய சானியா ஆர்மினிய வீராங்கனைக்கு எதிரான முதல் செட்டை மிகச் சுலபமாக வென்றார்.

இரண்டாவது செட்டில் ஆர்மீனிய வீராஙகனை சவாலாக இருநதாலும் அதை எதிர்க்கொண்டு சிறப்பாக வென்றார் சானியா.(ப-7)


# 12 போட்டிகளில் பட்டம் வென்று
# ரோஜர் பெடரர் சாதனை

உலகின் முதல்நிலை டென்னிஸ் ஆட்டக்காரரும் சுவிற்சர்லாந்தைச் சேர்ந்தவருமான ரோஜர் பெடரர் தாய்லாந்து ஓபன் பட்டத்தைக் கைப்பற்றியுள்ளார்.

பாங்ஹொக்கில் கடந்த ஞாயிற்றுக்கிமை நடைபெற்ற இறுதி ஆட்டத்தில் பெடரர் 6-4,6-0 என்ற நேர் செட்களில் அமெரிக்க வீரர் அன்டி ரோடிக்கை எளிதாக வென்றுள்ளார்.

இநத சீசனில் மட்டும் ரோடிக்கை 3 முறை வென்றுள்ளார் பெடரர். இவ்வெற்றி மூலம் அவர் டென்னிஸ் வரலாற்றில் புதிய சாதனையையும் படைத்துளளாா.

அதாவது டென்னிஸில் தொடர்ந்து 12 இறுதிப் போட்டிகளில் பட்டம் வெனற சிறப்பை பெற்றுள்ள 3வது வீரராகிறார் அவர்.



20 ஆண்டுகளுக்கு முன்பாக பிஜான் போர்க், ஜோன் மெக்கன்ரோ ஆகியோர் 12 போட்டிகளில் தொடர்ந்து வென்ற சிறப்பை பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது.

இந்த ஆண்டில் அவர் வெல்லும் 10 ஆவது பட்டம் இதுவாகும. (ப-7)

## விளையாட்டு செய்திகள்

# கிரிக்கெற் ஒளிபரப்பு உரிமையை பிரசாத் பாரதி பெற்றுள்ளது



இந்திய - அவுஸ்திரேலிய அணிகளுக்கு இடையே முதலாவது கிரிக்கெற் டெஸ்ட் இன்றுபெங்களூரில் தொடங்குகிறது. இந்த போட்டிக்காக நேற்று இரு அணி வீரர்களும் கடும் பயிற்சி மேற்கொண்டனர். பயிற்சியின் இடையில் உரையாடும் தலைவர் கங்குலி மற்றும் பயிற்சியாளர் ஜோன் ரைட்.

அடுத்த நான்கு வருடங்களுக்கு இந்தியாவில் நடைபெறும் ஒரு நாள் மற்றும், டெஸ்ட் போட்டிகளை ஒளிபரப்பும் உரிமையை பிரசாத் பாரதி பெற்றுள்ளது.

இதன்மூலம் தொடர்கதையாக நீடித்துக கொண்டிருந்த ஒளிபரபபு உரிமைப் பிரச்சினைக்கு தற்காலிகமாக முற்றுப்புள்ளி வைக்கப்பட்டிருக்கிறது.

ஆரம்பத்தில் 'ஜி' ரிவிக்கு உரிமையை வழங்கிய இந்திய கிரிக்கெற் கடடுப்பாட்டுச்சபை பின்னர் அதனை ரத்துச்செய்தது. அதை எதிர்த்து 'ஜி' ரிவி நிறுவனம் வழக்குத்தாக்குதல் செய்தது.

இந்நிலையில் இந்திய-அவுஸ்திரேலிய தொடர்கள் இன்று ஆரம்பமாகும் வேளையில் மாற்று ஏற்பாடாக 'ரென் ஸ்போர்ட்ஸ்' மற்றம் 'சொனி' ரிவி அலைவரிசைகளுடன் இணைந்து போட்டிகளை ஒளிபரப்ப கிரிக்கெற் கட்டுப்பாட்டுச்சபை திட்டமிட்டது.

ஆனால் ஒளிபரப்பு உரிமை தமக்கு வழங்காவிட்டால் உயர் நீமன்றத்தில் வழக்குத்தொடரப் போவதாக பிரசாத் பாரதி அறிவிததது.

அந்த அறிவிப்பைத் தொடர்ந்து இந்திய கிரிக்கெறசபை பிரசாத் பாரதியுடன் நடாத்திய பேச்சுவார்த்தையை அடுத்து சுமூகமான முடிவு எட்டப்படடது. அதன்படி இந்தியாவில் நடைபெறவுள்ள அவுஸ்திரேலியா தென்னாபிரிக்க டெஸ்ட் தொடர்கள், மற்றும பாகிஸதான் ஒருநாள் தொடர்களை தரைவழி, மற்றும் செயற்கைக்கோள் மூலம் நேரடியாக ஒளிபரப்பும் உரிமை தற்போது பிரசாத் பாரதிக்கு வழங்கப்பட்டுள்ளது. இதன்படி அதன் கட்டுப்பாட்டில் உள்ள தூர்தர்ஷன அலை வரிசையில் போட்டிகள் நேரடியாக ஒளிபரப்பாகும்.

இதற்கான ஒப்பந்தப்படி ஒரு நாள் போட்டிக்கு 3 கோடியும், டெஸ்ட் போட்டிக்கு 7 கோடியும் பிரசாத் பாரதி கட்டுப்பாட்டுச்சபைக்கு வழங்க வேண்டும். இந்த ஒப்பந்தததின் மொத்தப் பெறுமதி 100கோடியை அண்மித்தது எனப் பிரசாத் பாரதியின் தலைமை நிர்வாக அதிகாரி சர்மா தெரிவித்துள்ளார்.

தூர்தர்சன அலைவரிசை அதிகளவிலான மக்களை சென்றடைவதால் ஒளிபரப்பு உரிமையை எமக்கு வழங்குவதே நியாயமானது என சர்மா கிரிக்கெற் கட்டுப்பாட்டுச் சபைக்கு எடுத்துக்கூறியதை அடுத்தே தமக்கு அவ்வுரிமை வழங்கப்பட்டதாகவும் அவர் தெரிவித்தார். (ப-7)

# ஆசிரியர் தின கிரிக்கெற் போட்டி

(சாவகச்சேரி)

தென்மராட்சி கல்வி வலய ஊழியர், உத்தியோகத்தர் அணிக்கும் சாவகச்சேரி இந்துக்கல்லூரி ஆசிரியர் அணிக்கும் இடையிலான நட்பு ரீதியான மென்பந்துக கிரிக்கெற் போட்டியொன்று கடந்த மாதம் 30ஆம் திகதி சாவகச்சேரி இந்துக்கல்லூரி மைதானத்தில் நடைபெற்றது.

ஆசிரியர் தினத்தை முன்னிட்டு நடாத்தப்பட்ட இப்போட்டி 15ஓவருக்கு மட்டுப்படுத்தப்பட்டிருந்தது.

முதலில் துடுப்பெடுத்தாடிய கல்விவலய அணியினர் 14ஓவர்களில் சகல விக்கெற்றுக்களையும் இழநது 57ஓட்டங்களைப பெற்றனர். பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய இந்துக்கல்லூரி ஆசிரியர் அணி 9.5ஓவர்களில் ஒரு விக்கெற்றை மாததிரமே இழந்து 58ஓட்டங்களைப் பெற்று வெற்றி பெற்றது. (க-29)

# அரசாங்க கேள்வி அறிவித்தல்

## நிவாரணம்,புனர்வாழ்வு மற்றும் மீளிணக்கத்துக்கான அமைச்சினால் யாழ்.மாவட்டத்திற்கு நிவாரணத்திற்கு வழங்கப்படும் நாட்டரிசி (புழுங்கல்) வழங்கலுக்கான கேள்வி கோரல்

01. யாழ்.மாவட்டத்தில் இலவச நிவாரணம் பெறும் குடும்பங்களுக்கான 2004 யூன், யூலை, ஓகஸ்ட் மாதங்களுக்கான நிவாரணம் வழங்குவதற்குத் தேவையான அரிசியை யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவு, வவுனியா, மன்னார் ஆகிய மாவட்டங்களிலுள்ள பதிவு செய்யப்பட்ட ப.நோ.கூ.சங் கங்களிடமிருந்து கழ்க்கு[illegible]பிடப்பட்ட ப.நோ.கூ.சங்கங்களுக்கென கீழ்த் தரப்பட்டுள்ள அள[illegible]ில் நேரடியாக விநியோகிப்பதற்கான கேள்விகள் மேற் குறிப்பிட்டுள்ள மாவட்டங்களில் பதிவுசெய்யப்பட்டுள்ள பலநோக்குக் கூட்டுறவுச் சஙகங்களிடம் (வரைவுள்ளது) இருந்து கோரப்படுகின்றன. ஒவ்வொரு ப.நோ.கூ.சங்கத்திற்கும் வழங்கீடு செய்யபபட வேண்டிய தொகை கீழே குறிப்பிடப்பட்டுள்ளதுடன், இவைகளில் அளவு மாற்றங்கள் ஏற்படுமிடத்து அவை பின்னர் அறிவிக்கப்படும்.

| இல | ப.நோ.கூ.சங்கம் | அரிசியின் அளவு | | |
|---|---|---|---|---|
| | | யூன் (MT) | யூலை (MT) | ஓகஸ்ட் (MT) |
| 01. | சாவகச்சேரி | 190 | 190 | 190 |
| 02. | கைதடி | 70 | 70 | 70 |
| 03. | கொடிகாமம் | 135 | 135 | 135 |
| 04. | உடுப்பிட்டி | 32 | 32 | 32 |
| 05. | கட்டைவேலி-நெல்லியடி | 45 | 45 | 45 |
| 06. | பருத்தித்துறை | 114 | 114 | 114 |
| 07. | புலோலி | 27 | 27 | 27 |
| 08. | மருதங்கேணி | 80 | 80 | 80 |
| 09. | யாழ்ப்பாணம் | 311 | 311 | 311 |
| 10. | நல்லூர் | 161 | 161 | 161 |
| 11. | அச்சுவேலி | 154 | 154 | 154 |
| 12. | நீர்வேலி | 115 | 115 | 115 |
| 13. | மானிப்பாய் | 131 | 131 | 131 |
| 14. | பண்டத்தரிப்பு | 90 | 90 | 90 |
| 15. | அளவெட்டி-மல்லாகம் | 64 | 64 | 64 |
| 16. | தெல்லிப்பழை | 150 | 150 | 150 |
| 17. | சங்கானை | 183 | 183 | 183 |
| 18. | சுன்னாகம் | 196 | 196 | 196 |
| 19. | புங்குடுதீவு-நயினாதீவு | 40 | 40 | 40 |
| 20. | வேலணை | 45 | 45 | 45 |
| 21. | ஊர்காவற்றுறை | 70 | 70 | 70 |
| 22. | காரைநகர் | 55 | 55 | 55 |
| 23. | தீவகம் | 12 | 12 | 12 |
| 24. | நெடுந்தீவு | 30 | 30 | 30 |
| மொத்தம் | | 2500 | 2500 | 2500 |

02. கேள்விகளை சமர்ப்பிக்க விரும்பும் ப.நோ.கூ.சங்கங்கள் மீளளிக்க முடியாத கேள்வி வைப்பாக ரூபா.500/= யை யாழ்.மாவட்ட புனர்வாழ்வு புனரமைப்பு செயலகத்தில் செலுத்தி, கேள்விப் படிவங்களையும், கேள்வி ஆவணங்களை யும் 2004.10.06 திகதி தொடக்கம் 2004.10.21 திகதி வரையிலான காலப்பகுதி யில் அலுவலக நாட்களில் முற்பகல் 10.00 மணி தொடக்கம் பிற்பகல் 3.00 மணி வரை பெற்றுக்கொள்ளலாம். இவ்வசதிகள் கிளிநொச்சி, முல்லைத்தீவு, வவுனியா, மன்னா மாவட்ட ப.நோ .கூ.சங்கங்களை பொறுத்தவரையில் அந்தந்த மாவட்ட அரசாங்க அதிபரினுடைய அலுவலகத்தில் செய்யப்பட்டுள்ளன.

03. மீளளிக்க முடியாத கேள்வி வைப்புக்களாக ரூபா 500/= யை அந்தந்த மாவட்ட செயலகத்தில் செலுத்தி அரசாங்க அதிபரிடமிருந்து கேள்விப் படிவங்களை யும், கேள்வி ஆவணங்களையும் பெற்றுக்கொள்ளலாம்.

04. கேள்வி கோரப்படவுள்ள அரிசி நாட்டரிசியாக (புழுங்கல்) இருத்தல் வேண்டும் என்பதுடன் அவை கேள்வி பற்றிய ஆவணத்தில் தெரிவிக்கப்பட்ட நிபந்தனைகளை கொண்டிருத்தல் கட்டாயமானதாகும்.

05. பூரணப்படுத்திய இரு கேள்விப் படிவங்களை தலைவர், மாவட்ட கேள்விச் சபை, மாவட்ட செயலகம், யாழ்ப்பாணம். (அரசாங்க அதிபர், யாழ்ப்பாணம்) என முகவரியிடப்பட்ட நீள தபால் உறையில் நேரடியாகவோ/ தபால் மூலமாகவோ யாழ். செயலக மாவட்ட புனர்வாழ்வு புனரமைப்பு செயலக (கணக்காளரது) அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் 2004.10.22 பி.ப.2.00 மணிக்கு முன்பாக சேர்த்தல் வேண்டும். அன்றைய தினம் பி.ப. 3.00 மணிக்கு கேள்விகள் திறக்கப்படும். அப்பொழுது கேள்விகாரர் அல்லது அவரது எழுத்து மூலமான அங்கீகாரம் பெற்ற பிரதிநிதி சமுகமளிக்க முடியும்.

6. கேளவிப் பத்திரத்தின் தபால் உறையின் இடது பக்க மேல் மூலையில் புழுங்கல் அரிசி வழங்குவதற்கான கேள்வி என எழுதப்படல் வேண்டும்.

7. கேள்விகாரர்கள் (Bidders) குறிப்பிடப்பட்ட ப.நோ.கூ.சங்கங்களில் ஒன்றுக்கு அல்லது ஒன்றுக்கு மேற்பட்டவைக்கு தமது கேள்விகளை சமர்ப்பிப்பதற்கும் அச்சங்கங்களுக்கு விநியோகிப்பதற்கான வெவ்வேறான விலைகளை குறிப் பிடுவதற்கும் அருகதையுடையவர்களாவர். ஒவ்வொரு ப.நோ. கூ.சங்கத் திற்கும் விநியோகிக்கப்படவேண்டிய அரிசியின் தொகை வெவ்வேறான கேள்விகளாகக் கருதப்படும்.

8. ஏற்றுக்கொள்ளப்பட்ட கேள்விகாரர் ஒப்பந்தத்தின் பெறுமதியில் 10% மீளளிக்கப்படக்கூடிய வைப்பாக செயல்படுத்தல் முறிக்காக (Performance Bond) செலுத்தி ஒப்பந்தம் செய்துகொள்ளல் வேண்டும்.

9. கேள்விகள் பரிசீலனை செய்யப்படும் பொழுது சமர்ப்பிக்கப்பட்ட கேள்வி களின் விநியோகத்துக்கான விலை மாவட்ட விலை நிர்ணய சபையினால் நிர்ணயிக்கப்பட்ட விலையிலும் அதிகமாக இருத்தல் கூடாது. மாவட்ட விலை நிர்ணயம் செய்யப்படும பொழுது விநியோக விலை சந்தை விலையிலும் பார்க்க எக்காரணங்கொண்டும் அதிகமாக இருக்கமாட்டாது.

10. கேள்வி விண்ணப்பம் இறுதித் திகதியிலிருந்து கேள்விகள் 30 நாட் களுக்குள் வலுவுடையதாக இருக்கும்.

**செ.பத்மநாதன்**
தலைவர் /அரச அதிபர்,
மாவட்ட கேள்விச் சபை/
மாவட்ட செயலகம்,
யாழ்ப்பாணம்.

05.10.2004

(C/610)

# கவிதைப்போட்டி.........

(2ஆம் பக்கத்தொடர்ச்சி)

திரு.கந்தையா ஆனந்தராசா — அரச வீதி, உரும்பிராய்.
திரு.வேலுப்பிள்ளை முருகானந்தசோதி — நாவலர் வீதி, திருநாவலூர், புலோலி மேற்கு, பருத்தித்துறை.

திரு.அபிர்ராஜன — 60, கோவில்வத்,சுண்டுக்குளி, யாழப்பாணம.
திருகணபதிப்பிளளை சுவகாருணியம் — பிரம்படி ஒழுங்கை, கொர்க்குவில்.
திருமதி.சௌமிகா பாலபாஸ்கரன் — பொதுநூலகம், யாழ்ப்பாணம்.
செல்வன்.கைலாசநாதன் திருக்குமரன — கரணவாய் மத்தி, கரவெட்டி.
செல்வி.பத்[illegible]நாதன் மயூரதி — யா/வ.ம.ம.வி, வல்வெட்டித்துறை.
செல்வி.பிரேமினி சபாரத்தினம் — பெரிய அரசடி வீதி, சங்கத்தானை, சாவகச்சேரி.

செல்வி.லிங்கநாதன அகிலா — 50/45, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
திரு.மனாசை டேவிட் தம்பிராஜா — 35, இராசாவின் தோட்டவீதி, யாழ்பபாணம்.
செல்வி.இராசசிங்கம் ஸ்ரீகௌரி — வண்ணார்பண்ணை, முள்ளியவளை, முல்லைத்தீவு.

செல்வன்.செல்லத்துரை கார்த்தீபன் — இல.12, பலாலி வீதி, யாழ்ப்பாணம்.
செல்வன்.சிவஞானம் இன்பராஜ — மீசாலை மேற்கு, மீசாலை.
செல்வி.நித்தியா யோகராஜா — 18A மூத்தவிநாயகர் வீதி, நல்லூர், பாழ்ப்பாணம்.

செல்வன.வர்ணகுலசிங்கம் பிரதீபன் — இல.56, கே.கே.எஸ்.வீதி, கொக்குவில்.
செல்வன்.துரைராசா ஜேந்திரன் — சென்.செபஸ்தியார், வீதி, கோண்டாவில் கிழக்கு.

திரு.வல்லிபுரம் யோகானந்தசிவம் — வட்டு.வடக்கு, வட்டுக்கோட்டை.
திரு.சேவியர் வில்பிரட் சததியாப்பிள்ளை — 3ஆம் வட்டராம், அல்லைப்பிட்டி.
திருமதி.கணேஸ்வரி தனமூர்த்தி — இல.111, செம்மணிவீதி, யாழப்பாணம்.
செல்வி.ஆனந்தராணி வயிரமுத்து — புளியர் வளவு, வதிரி, கரவெட்டி வடக்கு.
திரு.இரத்தினசபாபதி தியாகராசா — நீர்வேலி மத்தி.
செல்வன்.இராசலிங்கம் கஜேந்திரன் — சங்கரத்தை குளத்தடி, வட்டுக்கோட்டை.
செல்வி.புராதனி ஏழூர்நாயகம் — பன்னாலை, தெல்லிப்பளை.
செல்வன்.ஜோர்ச் ஜெஸ்ரின் — 28/1, A.Y றோட், கொழும்புத்துறை.
செல்வன்.சிவஞானம் ஜெயானந்தன் — சர்வோதய வீதி, ஆவரங்கால் மேற்கு.
செல்வி.சின்னையா கீதா — சீனித்தொழிற்சாலை வீதி, சரசாலை தெற்கு, சாவகச்சேரி.

செல்வி.ஜினித்தா முருகையா — மே/பா.கு.தர்மினி, 3ஆம் கட்டை, சிங்காரகர் வளவு, கட்டைப்பிராய்.
திரு.கனகரத்தினம் நாகேஸ்வரா — சண்டிலிப்பாய் மேற்கு.
செல்வன்.கந்தசாமி பிரதீபன் — மே/பா.கி.நாகராசா, ஆலங்குழாய் வீதி சண்டிலிப்பாய் வடக்கு.

செல்வி.அனுரனி யசிந்தா அந்தோனிப்பிள்ளை — சேவில் ஒழுங்கை, தும்பளை மேற்கு, பருத்தித்துறை.

செல்வன.வக்ரர்றொபேட்சன செய்ரர் ஜோன்சன் — 123/1 சுருவில் வீதி, ஊர்காவற்றுறை.
திரு.ஆறுமுகம் ரவீந்திரன் — சட்டநாதர், வீதி, திருநெல்வேலி கிழக்கு, யாழ்ப்பாணம்.

செல்வி.கௌசலா கந்தசாமி — இராஜ வீதி, கணேசபுரம், கல்வியங்காடு.
செல்வி.பேரினபநாயகப் புஸபாஜினி. — மூளாய் வீதி, வட்டுக்கோட்டை.
செல்வன்.செல்வம் . வசீகரன். — புனித செபஸ்தியார் வீதி, கோண்டாவில் கிழக்கு, கோண்டாவில்.

செல்வன்.பூபாலசிங்கம் புலேந்திரன் — கமலவாசம், வட்டுகிழக்கு, வட்டுக்கோடடை.
செல்வி.சுப்பிரமணியம் சிவதுர்க்கா — குமரகோட்டம், கோண்டாவில்.
செல்வி.பாலசுந்தரம் கார்த்திகா — 'ஈஸ்வரி வாசம', கரவெட்டி கிழக்கு, கரவெட்டி.

செல்வி.ஸ்ரீ.புராதனி இராஜகோபாலன் — லோட்டாஸ் வீதி, மானிப்பாய்.
திருமதி.சாவித்திரி அத்துவிதானநதன் — 214/5 இராமநாதன் வீதி, திருநெல்வேலி தெற்கு, யாழ்ப்பாணம்.

திரு.சின்னத்துரை சிவபாதம் — 16, மணல்தறை வீதி, கந்தர்மடம், யாழ்ப்பாணம்.


க.பொ.த. (சா.த)
மாணவர்களே! வலம்புரியில்
தொடர்ந்து பயிற்சி
வினாத்தாள்கள்
வெளிவருகின்றன.


## விவாத அரங்கு - 6

விடயம்
மதுமாற்றத் தடைச் சட்டம்
தேவையானதா?
தேவையற்றதா?

நடுவர் : விதுரன்

உங்கள் வாதங்களை எழுதி அனுப்பி வையுங்கள்

*அனுப்பவேண்டிய முகவரி*
விவாத அரங்கு
வலம்புரி
இல.15, வெள்ளாந்தெரு,
யாழ்ப்பாணம்.

## ஈராக்கில் பயங்கரம்

# சுங்க அதிகாரிகள் 8பேர் உயிருடன் எரித்துக் கொலை

(பாக்தாத்)

ஈராக் நாட்டின் சுங்க அதிகாரிகள் 8 பேரை உயிருடன் எரித்த மர்ம நபர்கள், அவர்கள் கொண்டுசென்ற புரான கலைப் பொருள்களை கொள்ளையடித்துச் சென்று விட்டனர்.

5ஆயிரம் ஆண்டுகளுக்கு முந்தைய சுமேரிய காலத்தைச் சேர்ந்த இந்த அரிய கலைப் பொருள்களை திருட்டுக் கும்பல் ஒன்றிடமிருந்து நேற்றுமுன்தினம் ஈராக்கில் பாதுகாப்புப் பணியில் ஈடுபட்டுள்ள இத்தாலி நாட்டின் பொலிஸாரும் ஈராக் சுங்க அதிகாரிகள் எட்டு பேரும் கூட்டாக கைபற்றினர்.

இவற்றுள் புராதன நாணய்ங்கள், வேலைப்பாடு மிகுந்த ஆபரணங்கள், கலை நயம் மிகுந்த பண்டைக்கால பூச்சாடிகள் உள்ளிட்டவை அடங்கும்.

இவ்வாறு கைப்பற்றப்பட்ட கலைப் பொருளகளை உரிய இடத்தில் சேர்ப்பதற்காக சுங்க அதிகாரிகள் எட்டுப்பேரும் வாகனங்களில் அவற்றை எடுத்துச் சென்றனர். அப்போது மர்மநபர்கள் அந்த வாகனங்களை வழி மறித்து சுங்க அதிகாரிகள் 8பேரையும் உயிருடன் எரித்துவிட்டு கலைப் பொருள்களை எடுத்துச் சென்றுவிட்டனர்.

நேற்றுமுன்தினம் பொலிஸாரிடம் கலைப் பொருள்களை விட்டுவிட்டுத் தப்பியோடிய திருட்டுக் கும்பல்தான் இப் படுகொலையைச் செய்திருக்கலாம் என பொலிஸார் சந்தேகிக்கின்றனர். (ப)



சுமோ மல்யுத்தப் போட்டிகளில் இருந்து ஓய்வு பெறும் சுமோ மல் யுத்த சம்பியன் முசாஷிமரு கண் ணீர்மல்க தனது தலை முடிகளை வெட்டிக் கொள்வதைப் படத்தில் காணலாம்




அமெரிக்க வாழ் இந்தியப் பெண்களுக்கான அழகிப் போட்டி கடநத நியூஜெர்சியில் நடந்தது. இதில் பங்கு பற்றிய ரெஷூபாண்டே ஈசீ மிஸ் இந்தயா யு.எஸ்.ஏ. 2004 மூடுபட்டத்தை வென்றார். நியூயோர்க்கைச் சேர்ந்த சுப்ரினா (இடது) இரண்டாவது இடத்தையும், நியூஜெர்சியைச் சேர்ந்த திவா மூன்றாவது இடத்தையும் பெற்றனர்.

# ஈராக்கில் குண்டுவெடிப்பு 13பேர் பலி; 75 பேர் படுகாயம்

ஈராக்கில் நேற்று இரண்டு இடங்களில் குண்டு வெடிப்புச் சம்பவங்கள் நடந்ததில் 13 பேர் பலியாயினர். 75பேர் படுகாயமடைந்தனர்.

ஈராக்கில் சதாம் ஆட்சி வீழ்ந்த பின் அங்கு தங்கியுள்ள அமெரிக்கக் கூட்டணிப் படைகளை வெளியேறக்கோரி கெரில்லாப் படையினர் தாக்குதல் நடத்தி வருகின்றனர்.

WORLD NEWS
உலக தரிசனம்

வெளிநாட்டினர் தங்கியுள்ள ஹொட்டல்கள், அமெரிக்கக் கூட்டணிப் படையினர் முகாம்கள் மீது தொடர் தாக்குதல் நடந்து வருகிறது. அமெரிக்கக் கூட்டணிப் படைகளுக்கு ஆதரவாகச் செயல்பட்டு வரும் நிறுவனங்கள் மீதும் கார்க்குண்டுத் தாக்குதல் நடக்கிறது.

பாக்தாத்தில் உள்ள இராணுவ ஆள் சேர்ப்பு மையத்தின் வெளியே நேற்று கார்க் குண்டு வெடித்தது. இந்த சம்பவத்தில் 10 பேர் உடல் சிதறி பலியாயினர். 70க்கும் அதிகமான இளைஞர்கள் படுகாயமடைந்து மருததுவ மனையில் சிகிச்சை பெற்றுவரு கின்றனர். அதேநேரம் இதே நகரில் வெளிநாட்டினர் தங்கியிருந்த ஹொட்டலின் அருகே இரண்டாவது குண்டுவெடித்தது. இந்த குண்டுவெடிப்பில் 3பேர் உடல்சிதறிப் பலியானர்கள். 5பேர் படுகாயமடைந்தனர் என அங்கிருந்து கிடைக்கும் தகவல்கள் தெரிவிக்கின்றன. (ப)

## நோபல் பரிசு

(ஸ்டாக்ஹோம்)

மருத்துவத்துக்கான நோபல் பரிசு, அமெரிக்காவைச் சேர்ந்த விஞ்ஞானிகளான ரிச்சர்ட் அக்ஸல் லிண்டா பி.பக் ஆகியோருக்குக் கூட்டாக வழங்கப்படவுள்ளது.

உடல்கூறு இயலில் அவர்களது அரிய கண்டுபிடிப்புக்காக இவர்களுக்கு அப் பரிசு வழங்கப்படுகிறது. இதை ஸ்டாக்ஹோமில் நோபல் பரிசுக்குழு கடந்த திங்கட்கிழமை அறி வித்தது. இந்நோபல பரிசில் ரூ.6கோடி ரொக்கம். பாராட்டுப் பத்திரம் உள்ளிட்டவை அடஙகும். டிசம்பர் 10ஆம் திகதி அவர்களுக்கு பரிசு வழங்கப் படும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

பல்வேறு பொருள்களின் மணத்தை உணர்ந்து, அவை என்னென்ன என்பதைத் தீர்மானிப்பதற்கு ஆதாரமான 1000 வெவ்வேறு மரபணுக் கூறுகளின் தொகுப்பை அவர்கள் கண்டறிந்துள்ளனர். அதற்காக அவர்களுக்கு நோபல் பரிசு வழங்கப்படுகிறது.

நியூயோர்க்கில் உள்ள கொலம்பியா பல்கலைக்கழகத்தின் ஹாவர்ட் ஹக்ஸ் மருத்துவ நிறுவனத்தில் ரிச்சர்ட் அக்ஸலும், வாஷிங்டனின் சியாட்டில் உள்ள ஹச்சின்சன் புற்றுநோய் ஆராய்ச்சி மையத்தில் லிண்டா பக்-கும் பணியாற்றுகின்றனர் என்பது குறிப்பிடத்தக்கது. (ப)


# ஆய்வுகளுக்கு உதவும் எரிமலை

புவியின் வரலாற்றை அறிந்து கொள்ள எரிமலைக் கண்ணாடிகளையும் பயன் படுத்தலாம் என புவியியல் நிபுணர்கள் கண்டுபிடித்துள்ளனர்.

பாறைக்குழம்பு, எரிமலை வழியாக புவியின் மேற்பரப்புக்கு வரும்போது வெப்ப நிலை மாறுபாடு ஏற்படுகின்றது. அதிகமான வெப்ப நிலையில் இருந்து குறைவான வெப்பநிலைக்கு பாறைக்குழம்பு வருவதால் குளிர்வடைகிறது. இந்தக் குளிர்ச்சியினால் திரவ, தூள், கூழ்ம நிலையில் உள்ள எரிமலைக்குழம்பு எரிமலைக் கண்ணாடியாக உறைகின்றது. இதை "வல்கனிக் கிளாஸ்" என்று அழைப்பர்.

இது தோற்றத்தில் கண்ணாடியைப் போன்று இருக்கின்றது. ஒளி பிரதிபலிப்பு தன்மையைக் கொண்டுள்ளது. வழவழப்பும் ஒளி ஊடுருவும் தன்மையும் இதனில் உள்ளன. எனவே, இயற்பயியல் அறிஞர்கள் இதை எரிமலைக் கண்ணாடி என்றே அழைக்கின்றனர்.

எரிமலைக் கண்ணாடியில் ஒட்சிசன் அதிக அளவில் உள்ளது. சிலிக்கா இதில் 35 முதல் 75சதவீதம் வரை உள்ளது. அலுமினியம் ஒட்சைட் 12 முதல் 18சதவீதம் வரை உள்ளது. பெர்ரஸ் ஒட்சைட்,பெர்ரிக் ஒட்சைட், மங்கனிஸ் ஒட்சைட், சோடியம் ஒட்சைட் பொட்டாசியம் ஒட்சைட்,கல்சியம் ஒட்சைட் ஆகியவை மிகக் குறைந்த அளவிலும் உள்ளது.



எரிமலை கண்ணாடியை பழங்காலத்தில் ஆபரணக் கற்களாகப் பயன்படுத்தினர்.

ஆனால், தற்போது ஆய்வாளர்கள் எரிமலைக் க்ண்ணாடியை தகவல் பெட்டகமாக கருதுகின்றனர்.

எரிமலைக் கண்ணாடி அதன் மூலம் பாறைக் குழம்பின் இயற்கையியல் தன்மைகளை விளக்குகின்றது. மேலும் அருகிலுள்ள புவிப்பாறைகளின் வரலாறுகளையும் வயதையும் குறிப்பிடுகின்ற குறிப்புப் பாறைகளாகவும் பயன்படுகின்றது.

எரிமலைக் கண்ணாடியைப் பயன்படுத்தி எரிமலை குழம்பு தோன்றிய இடத்திற்கு அருகிலுள்ள பாறைகள் அவற்றின் மூலப் பாறைக் குழம்பின் வெப்ப வரலாறு போன்றவற்றை நுட்பமாக அறியலாம் என கண்டு பிடிக்கப்பட்டுள்ளது.

புவியை விட சந்திரன், செவ்வாய், வியாழன், வெள்ளி ஆகிய கிரகங்களில் எரிமலைகளும், எரிமலைக் கண்ணாடிகளும் மிகுதியான அளவில் உள்ளன. எனவே விண்வெளியில் கண்டுபிடிக்கப்படும் எரிமலைக் கண்ணாடிகளை விண்வெளி ஆய்வுகளுக்கும் எரிமலைக் கண்ணாடியை பயன் படுத்தலாம் என விண்வெளி ஆய்வு நிபுணர்கள் கருதுகின்றனர். (ப)


## சனிகிரகத்தை சுற்றி புதிய வளையம் கண்டுபிடிப்பு

(லண்டன்)

சனிக கிரகத்தைச் சுற்றி புதிய வளையம இருப்பதைக் கண்டுபிடித்துள்ளதாக பிரிட்டிஷ் விஞ்ஞானிகள் தெரிவித்துள்ளனர்.

அமெரிக்க-ஐரோப்பிய கூட்டுத்திட்டமான காசினி-ஹைஜீன்ஸ் திட்டத்தின் கீழ் அனுப்பப்பட்ட விண் [illegible] சனியைச் சுற்றிவருகிறது. அது பூமிக்கு அனுப்பயுள்ள புகைப்படஙகளை ஆராய்ந்தபோது புதிய வளையம் இருப்பது தெரியவந்துள்ளது.

லண்டன் பல்கலைக்கழகப் பேராசிரியர் கார்ல் முர்ரே இதை முதன்முதலில் கண்ட றிந்தார். இந்த புதிய வளையம் 306 கி.மீற்றர் அகலம் வாய்ந்தது. ஏற்கனவே கண்டறியப்பட்ட இரு வளையங்களுக்கு நடுவே இது இருக்கிறது. சனியின் துணைகோளான அட்லாஸின் மிக அருகே



இருக்கிறது. மேலும் ஏற்கனவே கண்டறியப்பட்டுள்ள வளையத்தினருகே புதிதாக நிலா இருக்கலாம் எனக்கருதப்படு கிறது. இது சிதைபாடுகளின் ஒரு பகுதியாக இருக்கலாம் எனவும் கருதப்படுகிறது. சனிக்கு ஏற்கனவே 33 நிலாக்கள் உண்டு. (ப)

# இந்தோனேஷிய அதிபர் தேர்தலில் சுசிலோபாம்பங் அமோக வெற்றி

(ஜகார்த்தா)

இந்தோனேஷிய அதிபர் தேர்தலில் மேகவதி சுகர்னோபுத்ரி தோற்றார். சுசிலோ பாம்பங் யுதோயனோ 60சதவீதம் ஒட்டுகளைப் பெற்று வெற்றிப் பெற்றார்.

இந்தோனேஷியாவில் கடந்த மாதம் 20ல அதிபர் தேர்தல் நடந்தது. இதன் முடிவுகள் நேற்றுமுன்தினம் வெளியிடப்பட்டன. அதிபர் மேகவதி சுகர்னோபுத்ரி தோல்வி அடைந்தார். அவரை எதிர்த்துப் போட்டியிட்ட முன்னாள் இராணுவ ஜெனரல் சுசிலோபாம்பங் யுதோயனோ வெற்றி பெற்றார். இவருக்கு 60.6சதவீத ஓட்டுகள் கிடைத்தன.

ஜகார்த்தாவில் நேற்று நிருபர்களிடம் பேசிய பாம்பங், இந்தோனேஷிய மக்களுக்கு நன்றி தெரிவித்தார். வேலை வாய்ப்புகளை உருவாக்கப் போவதாகவும் தீவிரவாதத்தை ஒழிக்கப் போவதாகவும் அறிவித்தார். தேர்தலில் அதிகளவில் முறைகேடுகள் நடந்ததாக குற்றம்சாட்டிய மேகவதி ஆதரவாளர்கள், தேர்தலை எதிர்த்து வழக்கு தொடரப் போவதாக அறிவித்தனர். (ப)

# நல்லதோர் சமுதாயத்தின் அச்சாணியாகி நானிலம் போற்றிடும் ஆசிரியப் பணி

**பெறுதற்கரிய பிறவியாம் மானிடப் பிறவிப்பயன் பெற்ற எம் மானிட வாழ்விலே கண்ணெனத்தகும் எண்ணையும் எழுத்தையும் எமக்கு அறிவிக்கும் உன்னத பணியை ஆற்றும் உயர்ந்தோர் ஆசிரியர்களே. அவர்தம் பணியை போற்றிக் கொண்டாடும் உலக ஆசிரியர் தின நன்னாளான இன்றைய தினத்தை, சிறப்பிக்கும் வகையில் இக்கட்டுறை பிரசுரமாகிறது.**

ஒக்டோபர் மாதம் ஆறாம் நாள் அனைத்துலக ஆசிரியர் தினமாகும். இந்நாள் அறிவுக் கண்ணைத் திறக்கும் ஆசிரியப பணியின் உயர்வையும் அதன் மகத்துவததையும் நன்றியுணர்வுடன் போற்றிப் பாராட்டிச் சிறப்பிக்கும் நாளாகக கொண்டாடப்படுகின்றது.

தமிழர் தம் பண்பாட்டு மரபிலே குரு என்று அழைக்கப்படும் ஆசிரியர்கள் தெய்வமாகவே மதித்துப் போற்றப்படுகின்றனர். ஒருவருக்கு வாழ்வில் நல்லறிவையும் பண்பாடு, கலாசாரத்தையும் உயர்ந்த நல்ஒழுக்க வாழ்க்கையையும் போதித்த சான்றோராக ஆசிரியாகள் விளங்குன்றார்கள்.

ஆசிரியரிடம் கல்வி பயிலும் மாணவரும் மற்றும் பொது மக்களும் சமுதாயத்தில் சகல வழிகளிலும் வழிகாட்டும் முன் உதாரணத்திற்குரியவர்களாக ஆசிரியப் பணிபுரிவோரை பெருமதிப்புடன நாம் போற்ற வேண்டும்.

சமுதாயத்திற்கு நல்லன காட்டும் நற்சான்றோர்களாகவும் நல்லொழுக்கச் சட்டங்களை வகுத்து மக்களை ஒழுக்கக்கட்டுப பாடுகளுக்குள் வாழ வழி காட்டி வந்தமையாற்தான் சட்டம் பியார் எனவும் நம் முன்னோர் ஆசிரியர் களை அழைத்து வந்தனர்.

இன்றைய காலப் போக் கில் ஆசிரிய,மாணவர் போக்கில் பல மாற்றங்கள் ஏற்பட்டுள்ளதால், கல்வி, சமூகப்பண்பாடுகளில் சீரழிவுகள் காணப்படுவதை நாம் காணக் கூடியதாக உள்ளது. மாணவர்களின் எதிர்கால நலனில் அக்கறையும் உண்மையான அர்ப்பணிப்புடன் பணி செய்யும் மன நிலையும் ஆசிரியர்களிடம் குறைந்திருப்பதும் இதனால் மாணவர்களும், மற்றையோரும் ஆசிரியப் பணியையும், ஆசிரியர்களையும் கீழ்மைப் படுத்துவதும் அன்றாடம் காணக் கூடிய தாகவுள்ளது.

இந்நிலை மாறி ஆசிரியப் பணி புரிவோர் தமது சமூகப் பொறுபபையும் தொழிலின் உயர்ந்த மகத்துவத்தையும் மனப்பூர்வமாக உணர்ந்து செயற்படவேண்டும். மாணவ சமுதாயம் ஆசிரியாகளே எமது சமூகத்தின் சிற்பிகள், அவர்களின் தனித்துவமும் மதிப்பும பெருமைக்குரிய மரியாதையும் காப்பாற்றப்படல் வேண்டும் என்பதை உணர்வு பூர்வமாக ஏற்றுச் செயற்படுவதும் எதிர் காலத் தில புதியதொரு நல்ல சமுதாயம ஏற்பட வழியாகுமன்றோ

உலக ஆசிரியர் தினம் கொண்டாடப்படும் இந்நாளிலே ஆசிரியாகளும் மாணவர்களும் பெற்றோரும் பரஸ்பரம் நல்ல புரிந்துதுணாவுடனும், நல்லதொரு பண்பு மிக்க எதிர் கால சமுதாயம் எம் மத்தியில் நிலைக்கவும் வேண்டிய ஆக்க பூர்வமான செயற்பாடுகளில் தம்மை அர்ப்பணித்து ஆவன செயவது அவசியமாகும்.

**"உலகை ஓம்புவது உழவர் பணி உலக மக்கள் உள்ளத்தை ஓமபுவது ஆசிரியர் பணி"**

எனும் ஆன்றோர் வாக்கை மனத்திருத்தி எதிர காலத்தில் அன்பும், பண்பும் நிறைந்த அறிவார்ந்த மதிப்பு மிகு நல்ல தாரு சமுதாயம் எம் மத்தியில் உருவாக இன்றைய நன்நாளிலே திடசங்கற்பம் பூணுவோமாக.

**வாழ்க நல்லாசான்கள்**
**வளர்க நன் மாணாக்கர்கள்.**

**கு.தியாகராஜ சர்மா**

## நிர்வாக முறைமை மாற்றம்

(பருத்தித்துறை)

தென்புலோலி புற்றளை சித்தி விநாயகர் ஆலய திருப்பணிச்சபை ஆலய பரிபாலன சபையாக மாற்றப்பட்டுள்ளது.

இவ் ஆலயத் திருப்பணிச் சபைப் பொதுக் கூட்டம ஆலய மண்டபத்தில் ஆல்ய பிரதம குரு. சிவஸ்ரீ. எஸ் ஜெயபாலசுந்தரக் குருக்கள் தலைமையில் அண்மையில் நடைபெற்றது.

இக்கூட்டத்திலேயே புதிய யாப்புத் திருத்தத்துடன் ஏக மனதாக இத் தீர்மானம் நிறை வேற்றப்பட்டது.

திருப்பணிச்சபையைப் பரிபாலன சபையாக மாற்றுவதற்கும் பொதுச்சபை ஏகமனதான தீர்மானத்தை நிறைவேற்றியது.

இதனையடுத்து ஆலய பரிபாலன சபை தெரிவு செய்யப்பட்டது. பரிபாலன சபைத் தலைவராக இளைப்பாறிய அதிபர் கே. வீணு கோபாலும் உப தலைவராக இளைப்பாறிய கடற்றொழில் பரிசோதகர் எஸ். கதிர்காமத்தம்பியும், செயலாளராக பிறப்பு இறப்பு விவாகப் பதிவாளர் என். கணேசலிங்கமும் உப- செயலாளராக கே. வேல்முருகுவும் பொருளாளராக வை. சணமுகவடிவேலும தெரிவு செய்யப்பட்டனர். (ற-52)

## இசைக்கச்சேரி

(கொழும்பு)

கொழும்பு பௌத்தாலோக மாவத்தையிலுள்ள இந்திய கலாசார நிலையத்தில் இன்று மாலை கலாநிதி லயனல அல்ஹம வழங்கும் இசைக்கச்சேரி ஒன்று நடைபெறவுள்ளது.

குரு ரவீந்திரநாத் தாகூரின் 63 ஆவது நினைவு தினத்தையொட்டி நடைபெறும் இவ் இசை நிகழ்வில், வாய்ப்பாட்டு மற்றும் இசைக் கருவிகள் மூலமாகவும் இசை விருந்து படைக்கவுள்ளா லயனல் அல்ஹம.

பக்கவாத்தியமாக சாந்த செனரத் யாப்பா தபேலா, எப்ஜர் பெரேரா, பஹாவாஜ் ஆகியோர் வயலின் வாசிககவுள்ளனர். (ற-7)

## படையினரை விடுவிக்க மறுத்தால் க.கா. குழுவின் பணிகள் முடக்கப்படும்

### சிங்கள அமைப்பு எச்சரிக்கை

(கொழும்பு)

தமிழீழ விடுதலைப்புலிகளால் கைது செய்யப்பட்டுள்ள ஊர்காவல் படையினர் இருவரையும் விடுதலை செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். இல்லாவிட்டால் வடக்குக் கிழக்கில் உள்ள போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் செயற்பாடுகளை முடக்கப்போவதாக எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

ஊர்காவல் படையினரை விடுவிக்கக் கோரி தொடர்ச்சியாகப் போராட்டம் நடாத்தி வரும் வடக்கு கிழக்கு சிங்கள அமைப்பே இவ் எச்சரிக்கையை விடுத்துள்ளது.

தம்மால் நடாத்தப்பட்டு வரும் போராட்டங்களுக்கு அரசாங்கமோ, போர் நிறுத்தக் கண்காணிப்புக குழுவோ உரிய பதில் எதனையும் தரவில்லை.

இதனால் தமது போராட்டத்தை மேலும் பன்முகப்படுத்தப்போவதாக அவ்வமைப்பு எச்சரிக்கை செயதுள்ளது. (க-121)

## சட்டவிரோதமாக இலங்கையிலிருந்த பங்களாதேஷ் பிரஜைகளை நாடு க்டத்த நடவடிக்கை

(கொழும்பு)

குடிவரவு குடியகல்வு சட்டத்தை மீறி இலங்கையில் தங்கியிருந்த போது கைது செய்யப்பட்ட பங்களாதேஷ் நாட்டவர்களில் 25 பேரை இவ வார இறுதியில் நாட்டைவிட்டு வெளியேற்ற நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப் படுகின்றது.

இது பற்றி குடிவரவு-குடியகல்வு பிரதிக் கட்டுப்பாட்டாளர் சி.ஏ.பொன்சேகா கருத்துத்தெரிவிக்கையில்,

சட்டவிரோதமாக இலங்கையில தங்கியிருந்த 78 பங்களாதேஷ் பிரஜைகளும் மரிகம தடுப்பு முகாமில் தடுத்துவைக்கப்பட்டுள்ளனா. இவர்களை பகுதி பகுதியாக நாட்டை விட்டு வெளியேற்ற அரசினால் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்றார். (க-61)


## தகவல் தரவும்

**இணுவில் மேற்கு திருவருள்மிகு செகராச சேகரப் பிள்ளையார் (பருத்தியடைப்பு) ஆலயத்தில் பழமைவாய்ந்த விநாயகர், அமமன், முருகன், தெய்வயானை ஆகிய ஐம்பொன் விக்கிரகங்கள் 02.10.2004 இரவு களவாடப்பட்டுள்ளன. இவை தொடர்பான தகவல் தருபவர்களுக்கு தகுந்த சன்மானம் வழங்கப்படும். இது தொடர்பாக சுன்னாகம் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.**

சின்னத்துரை சுந்தரலிங்கம்
அறங்காவலர் ஆதினகர்த்தா

(8874)


## வேலணைக் கல்விக் கோட்ட முதியோர், சிறுவர் தின போட்டி முடிவுகள்

(யாழ்ப்பாணம்)

சர்வதேச முதியோர், சிறுவர் தினத்தையொட்டி வேலணைக் கல்விக் கோட்டப் பாடசாலை மாணவர்களிடையே அண்மையில் நடாத்தப்பட்ட கட்டுரை மற்றும் கவிதைப் போட்டிகளின் முடிவுகள வெளியாகியுள்ளன.

மேற்படி போட்டிகளில் வெற்றி பெற்றோரின பெயர் விபரம் வருமாறு:-

**முதியோர் தினப் போட்டிகள்**

***கட்டுரை***

**ஆரம்பப் பிரிவு**

**(தரம்-3,4,5)**

**1 ஆம் இடம** ச.வித்தியா - நயினாதீவு கணேச வித்தி.

**2 ஆம் இடம** ரு.திரிபுரகஜன் - நயினாதீவு கணேச வித்தி.

**3 ஆம் இடம்** யோ. றம்சியா - வேலணை செட்டிபுலம் அ.க.த. பாடசாலை.

**இடைநிலைப் பிரிவு**

**(தரம்-6,7,8,9)**

**1ஆம் இடம** ரு.உஷாயினி -நயினாதீவு கணேச, வித்தி.

**2ஆம் இடம** அ.ரஜ்நதன் - நயினாதீவு கணேச வித்தி.

**3ஆம் இடம** வா. ரூபதாசன் -நயினாதீவு கணேச வித்தி.

***உயர் பிரிவு***

**தரம்(10,11,12,13)**

**1ஆம் இடம்** சி.அசோக்குமார் -வேலணை வைது .ம.மகாவித்தி

**2 ஆம் இடம** ம.கனித்தா- நயினாதீவு கணேச வித்தி.

**3ஆம் இடம** தே.ஷர்மிலன் சைவப்பிரகாச வித்தி.

***கவிதை***

**ஆரம்பப் பிரிவு**

**(தரம் -3,4,5)**

**1ஆம் இடம்** ர.வித்தியப் பிரதா- நயினாதீவு நாகபூசணி வித்தி

**2ஆம் இடம்** கு.அமுதீசன் - நயினாதீவு கணேச வித்தி.

**3ஆம் இடம்** க.சோபிதா- நாக பூசணிவித்தி.

**இடைநிலைப் பிரிவு**

**(தரம்- 6,7,8,9)**

**1ஆம் இடம்** ப.பவிந்தா- புங்குடுதீவு கமலாம்பிகை வித்தி.

**2ஆம் இடம** சி. லக்சனா- புங்குடுதீவு கமலாம்பிகை வித்தி.

**3 ஆம் இடம்** த.சாந்துஷா- நயினாதீவு மகாவித்தி.

**உயர் பிரிவு**

**(தரம்- 10,11,12,13)**

**1 ஆம் இடம** சி.அசோக்குமார்- வேலணை சேர் வை.து.ம. மகா வித்தி.

**2ஆம் இடம்** ம.கினித்தா- நயினாதீவு கணேச வித்தி.

**3ம் இடம** தே. ஷர்மிலன் வேலணை சைவப்பிரகாச வித்தி.

**சிறுவர் தினப் போட்டிகள்**

***கட்டுரை***

**ஆரம்பப் பிரிவு**

**(தரம்-3,4,5)**

**1ம் இடம்** சி.பவிதா-செட்டிபுலம் அ.த.க.பாடசாலை.

**2ஆம் இடம** ர.வித்தியப் பிரதா-நயினாதீவு நாகபூசணி வித்தி.

**3ஆம் இடம்** அ.மயூரி- வேலணை தெற்கு ஐயனார் வித்தி.

**இடைநிலைப் பிரி**

**(தரம் -6,7,8,9)**

**1ஆம் இடம்** இ.சுதர்சினி - புங்குடுதீவு கமலாம்பிகை வித்தி.

**2 ஆம் இடம்** எஸ்.லசியா - வேலணை சரஸ்வதி வித்தி.

**3ஆம் இடம்** வி.துஷ்யந்தன நயினாதீவு மகா வித்தி.

**உயர் பிரிவு**

**(தரம் - 10,11,12,13)**

**1ஆம் இடம்** செ.அருணன்- வேலணை சேர்.வை.து. ம.மகா வித்தி.

**2ஆம் இடம** உ.விதுசா- நயினாதீவு மகாவித்தி.

**3ஆம் இடம** பூ.தனுஜா- வேணை சேர்.வை.து.ம.மகா வித்தி.

***கவிதைப் போட்டி***

**ஆரம்பப் பிரிவு** (தரம்-3,4,5)

**1ஆம் இடம** - க.உமாலக்ஷி- நயினாதீவு கணேச வித்தி.

**2ஆம் இடம** இ.வித்திய சங்கா் நயினாதீவு நாகபூசணி வித்தி.

**3 ஆம் இடம** செ.நவநீதா- புங்குடுதீவு கமலாம்பிகை வித்தி.

**இடை நிலைப் பிரிவு**

**(தரம்-6,8,9)**

**1ஆம் இடம்** அ.நிரோஜா- புங்குடு தீவு கமலாம்பிகை வித்தி.

**2ஆம் இடம** மு.ஆரிபா- நயினா தீவு கணேச வித்தி.

**உயர் பிரிவு**

**(தரம்-10,11,12,13)**

**1ஆம் இடம்** ஓ.தாட்சாயினி நயினாதீவு கணேச வித்தி.

**2ஆம் இடம்** சி. விநோதன் வேலணை சேர் வைதும. மகா வித்தி.

**3ஆம் இடம** க.பிரியதர்சினி- நயினாதவு மகா வித்தி. (ற)

## சேது சமுத்திரத் திட்டம் குறித்து தொடர்கிறது சர்ச்சை

(கொழும்பு)

சேது சமுத்திரத் திட்டத்தால இலங்கைக்கு எந்தவிதமான பாதிபபும் இல்லையென இந்தியாவில் வைத்து ஊடகவியலாளர்களிடம் அமைச்சர் ஜெயராஜ் பெர்னாண்டோ புள்ளே கூறியிருப்பது கடும விசனத்தை ஏற்படுத்தியுளளது.

சேது சமுத்திரத் திட்டத்தினால் கொழும்புத்துறைமுகத்திற்கும் வடபகுதியிலுள்ள தீவுகள் மன்னார், காலி ,மாத்தறை போன்றவற்றுக்கும் பாரிய பாதிபபுகள் ஏற்படுமென மூத்த அமைச்சர்களும், சூழலியலாளர்களும் கடும் விசனம் தெரிவித்துவருகின்றனர்.

இந் நிலையில் இந்தியா சென்றுள்ள அமைச்சர் ஜெயராஜ் பெர்னாண்டோ புள்ளே கருத்து வெளியிட்டுள்ளமை பொறுபபற்ற விததததில் அமைந்திருப்பதாகப் பலராலும் சுட்டிக்காடடப்பட்டுள்ளது. (ற-8)

## எரிபொருள் விலையுயர்வுக்கு உலக வங்கி மீது பொறுப்பைச் சுமத்துகிறது அரசாங்கம்

(கொழும்பு)

ஐக்கிய தேசியக் கட்சியின் ஆட்சிக் காலத்தின் போது ஈராககில் யுத்தம் ஏற்பட்ட காரணததினால் எரிபொருட்களின் விலைகள் அதிகரிக்கபபட்டன.இருந்த போதிலும் அந்தச்சுமை பொது மக்கள் மீது சுமத்தப்படவில்லையென ஐக்கிய தேசியக் கட்சியன் பாராளுமன்ற உறுப்பினா காமினி லொக்குகே தெரிவித்துள்ளார்.

அதிகரித்துச் செல்லும் வாழ்க்கைச் செலவைக் கட்டுப்படுத்த முடியாத ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பு அரசாங்கம் உலக வங்கியின் மீது பொறுப்பைச சுமத்தும் சாதகமற்ற முயற்சியில் ஈடுபட்டுள்ளது.

தேர்தலுக்கு முன்னர் உலக வங்கியின் தேவைப்படி நடந்து கொள்ளமாடடோம் எனத்தெரிவித்த மக்கள் விடுதலை முனனணியினர் தற்போது மௌனம் சாதித்து வருகின்றனர் எனவும் காமினி லொக்குகே மேலும் தெரிவித்தார். (ற-8)

# அருகி வரும் கிராமியப் பண்புகள்

ஆ.முருகதாஸ்
(ஆசிரியர்)

கிராமம் என்பது கூட்டுறவு அடிப்படையில் இனபந்தங்களோடு ஒன்றித்து வாழ்வதாகும். 'ஒற்றுமையே பலம்' என்பதற்கு இணங்க கிராம மக்கள் புரிந்துணர்வுடனும், கடமையுணர்வுடனும் செயற்பட்டனர். கிராமத்துக்குக் கிராமம் பேச்சுவழக்கு, உபசரிகரும் முறை ஆகியவை வேறுபாடுடையதாகவே காணப்பட்டன.

இக் கிராமங்களிடையே காலங்காலமாக வளர்ந்த பண்பாடுகள் யாவும் பாடசாலைகள், ஆலயங்கள், சனசமூக நிலையங்கள், விளையாட்டு மைதானங்கள் ஆகிய இடங்களை மையமாக வைத்தே வளர்த்து வந்தன. இம் மக்களிடையே மற்றவர்களுக்கு உதவக்கூடிய மனப்பாங்கு முன்னேறின. அதாவது பொறுமை, விட்டுக் கொடுக்கும் மனப்பான்மை, நன்றியுணர்வு, கட்டுப்பாடு ஆகியவை அவர்களிடையே காணப்பட்டன. ஒரு குடும்பத்தினருக்கு ஏற்படும் துன்பம், மற்றக் குடும்பத்தினருக்கு ஏற்பட்ட துன்பமாகவே கருதி வாழ்ந்தனர். அத் துனபததில் இவர்களும் கலந்து இடர் துடைக்க முயன்றனர்.

### கிராமியப் பண்பாடுகள்

கிராமங்களுக்கு என ஒரு பண்பாடு உண்டு. அதாவது இறுக்கமான கலாசாரப்பண்பு அவர்களிடையே காணப்பட்டது. உறவு முறைகள் இறுக்கமானதாக, பலமுள்ளதாக, சுதந்திரமுள்ளதாக, ஒற்றுமையுடையதாக இருநததது. இவ்வாழ்க்கை முறையானது. தொடர்ச்சியான உறவு முறையாகக் காணப்பட்டது. கிராமிய மக்கள் பொருளாதார ரீதியில் நலிவுடைய மக்களாகவே அந்நாட்களில் காணப்பட்டனர். இதனால் ஒருவருக்கொருவர் 'நன்றி மறப்பது நன்றன்று' என்பதற்கேற்ப மானிடநேயம் கொண்டவர்களாக வாழ்ந்தனர்.

கிராமிய வாழ்க்கையில் கிணறுகளை ஒரு குறிப்பிட்ட குடும்பத்தினர் பயன்படுத்தி வந்தனர். அவற்றிற்கேற்படும் செலவீனங்களை அவர்கள் தாமே பங்கிடடுத் தம்வாழ்க்கையைக் கொண்டு சென்றனர். துலா, கப்பி ஆகியவைகளைக் கிணறுகளில் பாவித்து நீரைப்பெற்றனர். வவசாயத்துறையில் பட்டை மூலம் கிணற்றில் நீரை இறைத்துப் பயிர்களுக்கு நீர்ப்பாசனம் செய்தனர். ஆனால் இன்று கிராமங்களில் பொருளாதார வளர்ச்சி ஏற்பட்டதனால் வீட்டுக்குவீடு குழாய்க் கிணறுகள் உள்ளன. அதாவது குடும்பங்கள தங்கள் வாழ்க்கை முறைகளில் பாரிய மாற்றங்களை ஏற்படுத்தியுள்ளனர். திருமணங்கள், வீடுவேய்தல், இழவுவீடுகள், ஆலயங்கள் ஆகியவைகளில் வித்தியாசமான நடைமுறைகளே கையாளப்படுகின்றன.

### உறவு முறைத் திருமணங்கள்

கிராமங்களில் திருமணங்களை எடுத்துக்கொண்டால் உறவுமுறைகள் பலம் அடைய வேண்டும் என்ற நோக்கத்தில் சொநத மைத்துனனையே மைத்துனிக்குத் திருமணம் செய்தனர். அத்துடன் சொத்துக்கள் தங்கள குடும்பங்களிடையே நிரந்தரமாக இருக்கவேண்டும் என விரும்பினர். ஆனால் இன்று சொந்த முறைத் திருமணங்கள் அருகியே காணப்படுகின்றன.

திருமணம் சொர்க்கத்தில் நிச்சயிக்கப்படுகின்றது என்ற நிலைமாறி இன்று பல இலட்சங்களால், வர்த்தக நோக்கத்தில் தீர்மாணிக்கப்படுகின்றது. அதாவது தரகர் (புரோக்கர்) மூலமே நிச்சயிக்கப்படுகின்றது. பழைய கிராமிய முறைகளில் தம் குடும்பங்களிடையே திருமணத்தில் தடங்கல் ஏற்படும் சந்தர்ப்பங்களில் அந்த மணமகன் அல்லது மணமகனின் தந்தை சென்று அவர்களுடன் பேசித் தீர்த்துக்கொள்கின்றார். ஆனால் இன்று இப்பிரச்சினைகள் தரகர்களாலேயே தீர்த்துவைக்கப்படுகின்றது.

திருமணம் நடைபெறும் போது, அந்த வீட்டில் உள்ள உற்றார், உறவினர் பலநாட்களாக அத்திருமண வீட்டுக்குத் தேவையான சகல ஏற்பாடுகளையும் செய்தனர். பந்தல் அமைக்கின்ற வேலைகளில் அத் திருமணவீட்டாரின் உற்றார், உறவினர், நண்பர்கள் எல்லோரும் பங்கேற்றனர். ஆனால் இன்று வீடுகளில் தகரக்கொட்டகை அமைப்பதனால் சுகாதாரக் கெடுதிகளை விளைவிக்கக் கூடியன வாகக் காணப்படுகின்றன. கிடுகுப்பந்தலிலே உள்ள சுவாத்தியம் இவற்றில் காணப்படுவதில்லை. இன்று வெளிநாட்டுப் பணவசதிகளால் கிராமியத் திருமணங்கள் மண்டபத்திருமணங்களாக மாற்றமடைந்துள்ளன. அத் திருமணங்களுக்குச் சமூகமளிக்கும் உறவினர்கள் கூட மண்டபத்துடனேயே தங்கள வருகையை முடித்துக் கொள்கின்றனர்.

பாரம்பரிய கிராமங்களில் கூடுதலான வீடுகள் மண் வீடுகளாகவே இருந்தன. இவ் வீடுகள் ஓலைகளால் வேயப்பட்டன வாகவே காணப்பட்டன. ஆனால் இன்று பொருளாதார மேம்பாடு கிராமங்களில் ஏற்பட்டதனால் மண்வீடுகள் அருகி கல்வீடுகள் கட்டப்படுகின்றன. அவ்வாறு மண் வீடுகள் குறைந்தளவு காணப்படுவதால் இன்று அந்த ஏழைக் கிராமிய மக்கள் கூலி கொடுத்தே வேய்கின்றனர். இதை ஒரு தொழிலாக மாற்றமடைந்து வருவதை எமது சமுதாயத்தில் காணக் கூடியதாகவுள்ளது.

கிராமங்களில் ஒரு குடும்பத்தில் இழவு வீடு ஏற்பட்டால் அக் குடும்பத்தைச் சேர்ந்த உறவினர் அந்தியேட்டி வரை படுத்து இழவு காத்தனர். ஒரு ஏழைக்குடும்பத்தைச் சேர்ந்த ஒருவருக்கு இழவு வீடு ஏற்பட்டால் அக் கிராமத்தைச்சேர்ந்த சில வசதிபடைத்தவர்கள் சேர்ந்து நிகழ்வை ஒப்பேற்றி வைக்கின்றனர். இந் நிகழ்வு அவர்களின் ஒற்றுமையுணர்வை எடுத்துக் காட்டுகின்றது. அந்த இழவு வீட்டைச் சேர்ந்தவர்களுக்குக் காலை ஆகாரம், மதிய உணவு ஆகியவற்றைக் கொடுக்கின்றனர். இவை திருப்பிக் கொடுக்கின்ற சம்பிரதாயப் பண்பாகக் கிராமிய மக்களிடையே காணப்படுகின்றது. இன்று செயற்பாடுகள் குறைந்துவிட்டன.

கிராமிய வாழ்க்கைக்கு எடுத்துக்காட்டாக ஆலயங்கள், சனசமூக நிலையங்கள், விளையாட்டு மைதானங்கள் ஆகியவை சான்றுபகருகின்றன. பாரம்பரிய கிராமங்கள் ஆலயங்களில் குலதெய்வங்களை வைத்தே வழிபட்டனர். அதாவது இன்று இம் மக்கள் தமக்கென ஆகம முறைப்படி ஆலயங்களை அமைத்து வழிபடுகின்றனர். ஆலயங்களில் அதன் வளர்ச்சி கருதி, முனைப்பாக இன்று திருமண மண்டபங்கள் அமைக்கப்படுகின்றமையை நாம் கண்ணூடாகக் காண்கின்றோம். இம் மக்கள் தங்கள் அறிவு விருத்தியை வாசிப்பின் மூலம் வளர்க்கச் சனசமூகநிலையங்களை அமைத்தனர். இந்தச் சனசமூக நிலையங்களினூடாக விளையாட்டுக் கழகங்களைத் தோற்றுவித்து சுற்றுப்போட்டிகளில் கலந்து கொள்கின்றனர்.

பாரம்பரிய திருமணம் செய்த கிராமியப் பெண்கள் குங்குமம் இட்டு கணவனே கண்கண்ட தெய்வம் என வாழ்ந்தனர். இன்றைய கிராமியப் பெண்கள் ஒட்டுப்பொட்டுகளோடு முழங்காலை மூடாத பாவாடையணிந்து இனங்காண முடியாதவர்களாக நடமாடுகின்றனர். திருமணம் செய்த பாரம்பரிய கிராமியப் பெண்கள் வீட்டில் இருந்து வெளியிடங்களுக்குச் சேலை அணிந்தே சென்றனர். இன்றைய பெண்கள் சேலைகளை மறந்து 'ரைட்ஸ்கேட்' உடையணிந்து குதியுயர்ந்த சப்பாத்துப் போட்டுச் செல்கின்றனர். முகம் குளிர மஞ்சள் பூசிய பெண்கள் ∴பெயர் அன் லவ்லி பூசுகின்றனர்.

கிராமங்களில் பாதணிகளை வீட்டிற்கு வெளியே கழற்றி வைக்கும் முறை காணப்பட்டது. ஆனால் இன்று வீட்டுக்குள்ளும் கழற்றாது செருப்புக்களை அணிந்து செல்லும் பெண்களையும், ஆண்களையும் காண்கின்றோம். நாம் எந்த நாட்டுக்குச் சென்றாலும் எமது கிராமியப் பண்புகளைக் கைக்கொள்ள வேண்டும் என்பதை மறக்கக் கூடாது. நாகரிகம் வளர்ச்சியடைந்தாலும் எமது பண்புகளை மாற்றாமல் நாம் வாழவேண்டும்.

*(நன்றி கவின்தமிழ் -2003)*

# தெஹல்கா ஆயுதபேர ஊழல் சி.பி.ஐ விசாரணைக்கு உத்தரவு

தெஹல்கா ஆயுத பேர சாச்சை குறித்து இனி சி.பி.ஐ. விசாரிக்குமென்று ஏற்கனவே அமைக்கப்பட்ட விசாரணைக் குழுவின் ஆயுட்காலம் நீடிக்கப்படமாட்பாது என்றும் மத்திய அரசு அறிவித்துள்ளது.

ஆனால் மத்திய அரசின் நடவடிக்கை விசாரணையை திசை திருப்பும் செயலென பா.ஜ.க. குற்றஞ்சாட்டியுள்ளது.

தேசிய ஜனநாயகக் கூட்டணி ஆட்சியில் பாதுகாபபுத் துறையில் நடந்த ஊழல்களை அம்பலப்படுத்த தெஹல்கா இணையத்தளத்தின் பிரதிநிதிகள் ஆயுத வியாபாரிகள் போல் நடிதது அபபோதைய பா.ஜ.க. தலைவர் பங்காரு லக்ஷமணன் உள்ளிட்டோருக்குப் பணம் கொடுததனர்.

இந்தப் போலி ஆயுத பேரத்தின் காட்சிகளை தெஹலகா இணையத்தளம் ஒளிபரப்பியது. பெரும் பரபரப்பை ஏற்படுத்திய இந்தக் குற்றச்சாட்டை அடுத்து அப்போதைய பாதுகாப்பு அமைசசரான ஜோர்ஜ் பெர்ணான்டஸ் பதவி விலகினார்.

இது தொடர்பாக அமைக்கப்பட்ட விசாரணை ஆணைக்குழுவின் பதவிக்காலம் முடிவடைந்து விட்டதால், நேற்று முன் தினம் டில்லியில் செய்தியாளர்களுகத்குப் பேட்டியளித்த மத்திய சட்ட அமைச்சர் பரத்வாஜ் இந்தச் சர்ச்சை குறித்து சி.பி.ஐ. விசாரணை நடத்தும் என்றார்.

ஆயுத பேர விவகாரம் குறித்து ஜோர்ஜ பெர்ணான்டஸ் உள்ளிட்டோரிடம் விசாரணை நடத்தாமல் குற்றஞ்சாட்டப்பட்டவர்களைப் பாதுகாக்கவே முந்திய அரசு முயற்சித்ததாகப் பரத்வாஜ் குற்றஞ்சாட்டினார். (து)

# 150 மாவட்டங்களில் 'வேலைக்கு உணவுத் திட்டம்'

இந்தியாவில பின்தங்கியுள்ள 150 மாவட்டங்களில் 'வேலைக்கு உணவுத் திட்டம்' இன்னமும் சில வாரங்களில் அமுல்படுத்தப்படுமென்று பிரதமர் மன்மோகன்சிங தெரிவித்துள்ளார்.

நேற்று முன்தினம் டில்லியில் நடைபெற்ற 2002-20003 ஆம் ஆண்டுகளுக்கான தொழிலாளர் விருது வழங்கும் விழாவில் கலந்து கொண்ட மன்மோகன்சிங், வறுமையை ஒழிப்போம் என்ற முழக்கத்துடன் வேலை வாய்ப்பைப பெருக்குவோம் என்ற புதிய விளக்கத்தைத் தெரிவிததுடன் வேலை வாய்ப்புகள் கூடிய வளர்ச்சிக்கே தமது அரசு முக்கியத்துவம் தரும என்றார்.

தேசிய வேலை வாய்ப்பு உத்தரவாதத் திட்டத்தின் முதல் கட்டமாக பின்தங்கிய நிலையிலுள்ள 150 மாவட்டங்களில் வேலைக்கு உணவுத் திட்டம் அடுத்த சில வாரங்களில் அமுல் படுத்தப்படு மென்று பிரதமர் தெரிவித்தார்.

இத் திட்டத்தின் மூலம் கிராமப்புற ஏழை மக்களுக்கு ஆண்டுக்கு 100 நாட்கள் வேலை வழங்கப்படும் என்றும் வேலைக்கு உணவுத் திட்டத்தைத் தொடங்குவதற்கான அனைத்து ஏற்பாடுகளும் தயாராகி விட்டதாகவும் பிரதமர் கூறினார். (து)

# இந்தியச் செய்திகள்



இந்தியக் குடியரசுத தலைவர் டாக்டர் ஏ.பி.ஜே. அப்துல கலாம் கடந்த சனிக்கிழமை சென்னை வந்தார். சென்னையில நடைபெற்ற பல்வேறு நிகழ்ச்சிகளில் கலந்து கொள்வதறகாக வந்த அவரை, தமிழக பொதுப் பணிததுறை அமைச்சர் ஓ. பன்னர்ச் செல்வம் பூங்கொதது கொடுத்துவரவேற்றார். உடன் தமிழக ஆளுநா பி.எஸ். ராம மோகனராவ்.



இந்திய சுதந்திரப் போராட்டத்தில் மிக முக்கிய பங்கு விகித்த மகாத்மா காநதியின் 135வது பிறந்த தினம் அக்டோபர் 2ஆம் திகதி கொண்டாடப்பட்டது. இதையொட்டி பெங்ளூரில்நடைபெற்ற விழா வில மகாத்மா காந்தி போன்று உடையணிந்து செல்பவரின் பின்னால் இந்திய கிரிக்கெட் அணியின் துணைத் தலைவர் ராகுல் ட்ரா விட் செல்லும் காட்சி.

# கல்விப் பொதுத் தராதர (சா/த) மாதிரிப் பரீட்சை - 2004

# General Certificate of Examination (Ord.Level) Model Examination - 2004

# English Part I

Time: 1 hour Prepared- Mrs. A. Kiruvaratnam
J/ Mallakam M. V.

**I. Match the statements in A With the Actions in B by Writing the Correct Letters in the appropriate box. The 1st one is done for you.**

**A**

0- Andrew is interested in machines [c]
1- Sarath wants to work as a field officer [ ]
2- Vindya wants to work abroad [ ]
3- Sanduni and Dilini Want to Start a Salloon [ ]
4- Hasitha's parents have their own company [ ]
5- Mala would like to work with people [ ]

**B**

a- look for an overseas job.
b- look for an outdoor job.
c- study engineering.
d- follow a beauty culture course.
e- train to be a social worker.
f- work for the family business.

**II. Read the following conversations and fill in the blanks. use the words/ phrases in the box. The first one is done for you.**

-go out for lunch
-deposit some money.
-go to school early.
-Bank
-attend.
-go out.

Mala:- Is the (1) Bank open? I'd like to(2)................................

Sumi:- yes, It is open today.

Bala:- It's 12 noon Let's (3)........................................

Sumi:- you can't (4)........................................the lift doesn't work.

Rathi:- Tody I must (5)..................................

Ravi:- why? Do you have any special class?

Rathi:- Today I have to (6)............................... A meeting.

**III. Read the following letter and find out the correct words in the brackets to suit them by underlining it.**

(of, off,for) Green Path,
New City,
29th June. 04.

Dear Cousin;

I thank you (on, for, with) your letter which I had (by, from, on) Manday (at, in, on) 10.a.m. The news (for, about, from) your brother's success in the examination has given me much joy. You say that he will be leaving (to, for, across) U.K soon. I would like to seen him (for, before, with) he leaves. But I am pressed (by, for, of)time. I'm always busy with lot of wark to do both (in, at, near) home and (at, into, in ) school.

Please write to me when your brother is leaving.

With Love
Yours affectiontely
Dixon.

**IV.supply the missing letters to the incomplete words in the following sentences and make them meaningful.**

1) He took m—d—ci— — —daily for a week.
2) Cars are kept in g— —ag—s.
3) Cooking is done in ki— —h— —s.
4) A temple, a church and a mosque are places of w— —s— —p.
5) Newpapers are full of a—v— —t— — —m— —ts.

**V. Read the description about "Giraffe" and write a similar description about "Elephants" .Use the words in the boxes to write your description.**

Giraffe: Giraffe is the tallest animal in the world. It has a very long neck two horns on its head. It has brown patterns on its body. It eats the leaves of trees. Giraffe can run quickly.

Elephants [Largest land animals, trunk, tusks, trumpet, Leaves.]

**VI. Read the following text about a famous book and complete the table given below-**

"The old man and the sea'' by Earest Hemingway is an unusually well-written short novel. The characters of the old man and the young boy are believeable. The heart of the story lies in the boy's faith in the old man and in the old man's noble ability to endure against odds. The story of one man's struggle against natural elements is compelling and convincing.

"The old man and the sea'' can be found in the school library and is available in paperback editions in most book stores. Anyone enjoying this novel also enjoy the exciting adventures described in Hemingwuy's "The green hills of Africa''

**Book Review**

1) Name of Book- (1)................................................
2) Authors name- (2)................................................
3) Kind of Book- (3)................................................
4)The main characters of the story (4)..........................................
(5)..........................................
5) The subject of the story (6)..................................
6)Book available at (7)..............................(8)..............................
7) Other book of the author (9)..................................
8) Type of story (10)................................................

**VII. Read the sentences below. Put the sentences below. Put the sentences in the right order so that they tell a story. Write the correct number in the box.**

-He did not listen to their advice. [ ]
-He swam farther out the sea. [ ]
-Gamini wanted to swim farther out to the sea. [ ]
-They played in the water and were very happy. [ ]
-oneday Mathu,Gamini and Mohamad went swimming [ ]
-Gamini did not listen to his friends. [ ]
-A man swum to him and brought him back to the shore. [ ]
- suddenly he felt he was being swept away. [ ]
-He called for help. [ ]
-Mathu and Nathan told him it was not safe. [ ]

நாளை ஆங்கில வினாத்தாள் பகுதி II வெளிவரும்.

க.பொ.த (சா/த) மாணவர்களே!
வலம்புரியில் தொடர்ந்து பயிற்சி வினாத்தாள்கள் வெளிவரும்
உங்கள் பிரதிக்கு முந்துங்கள்.

## இன்று ஒரு தகவல்

# தைரியம்

ஒரு சிறு பையன் என்னைத் தேடிவந்தான்."மாமா ஒரு கதை சொல்லுங்கள்" என்றான்.'சொந்தமாக எதுவும் தெரியாதே' என்றான். உங்களுக்குச் சொந்தமாக எதுவும் தெரியாது என்பது எனக்குத் தெரியும் என்றான். இந்தப் பையன் என்னிடம் அடிக்கடி வந்து கதை கேட்பவன். அதனால எனது ரகசியம் முழுதும் அவனுக்கு அத்துப் படி அதனால்தான் அவ்வளவு தெளிவாகக் கூறினான்.

"சரி இப்போது என்ன செய்யலாம்" என்றேன். "பழைய கதை எதையாவது சொல்லுங்களேன்'' என்றான். "உனக்கு கிருஷ்ண தேவராயரைத் தெரியுமா?" என்று கேட்டேன். அவரிடம நேரில் பழக்கமில்லை.ஆனால் அவரைப் பற்றிப புததகத்தில் படித்திருக்கிறேன் என றான். சரி இவனிடம மேற்கொண்டு பேச்சுக் கொடுத்தால் நம்மை ஒரு மாதிரி ஆக்கிவிடுவான் என்பதைப் புரிந்து கொண்டு அவன்ன உட்கார வைத்து கடைசிவரை குறுக்கே பேசக்கூடாது என்று கண்டிஷனும் போட்டு அந்தக் கதையைக் கூற ஆரம் பித்தேன்.

ஒரு சமயம் கிருஷ்ண தேவராயர் சமஸ்தானத் திற்கு ஒரு பெரிய வித்துவான் வந்து சேர்ந்தார். "என் னுடன போட்டி போட இந்த ஊரில் யாராவது இருக்கி றீர்களா?'' என்று சவால விட்டார். அந்த ஊரில் இருந்த பெரிய பெரிய வித்துவானெல்லாம் இது என்ன வம்பு என்று நினைக்க ஆரம்பித்துவிட்டார்கள். யாரும் அந்த ஆளுடன் போடடியிடத் தயாரில்லை.

எல்லோரும் நடுங்கிக் கொண்டிருந்த அந்த நேரத்தில ஒருவன் மட்டும் தைரியமாக முன்னுக்கு வந்தான். யார்"தெரியுமா? தெனாலிராமன்.அந்த சமஸ்தானத் தில் விகடகவி அவன். ''என்னை அனுப்புங்கள் போட்டிக்கு! நான் ஜெயித்துக் காட்டுகிறேன்" என்றான். "உனக்கு அவ்வளவு தைரியமிருக்கிறதா?'' என்று கேட்டார்கள் மற்றவர்கள். "தைரியம் மட்டும் தான் எண்டம் உள்ளது.ஆனால் தைரியமிருந்தால் அதிர்ஷ்டம் தேடிக் கொண்டுவரும் என்று எனக்குத் தெரியும்'' என்றான்.

அடுத்த நாள் போட்டி ஆரம்பமானது. அந்தப் பெரிய வித்துவான் வந்து நின்றார். தெனாலிராமன் எதிரில் வந்து நின்றான். அந்த வித்துவான் ஒரு விரலைக் காடடினார். தெனாலிராமன் இரண்டு விரலை நீட்டினான். வித்து வான் மூன்று விரலைக் காட்டினார். இவன் உடனே நான்கு விரலைக் காட்டினான்.அவர் ஐந்து விரலை நீட்டி னார். தெனாலிராமன் உடனே தன் முஷ்டியைக் காட்டினான் அவ்வளவு தான். அந்தப் பெரிய வித்து வான் கிருஷ்ண தேவராயரின் காலில் விழுந்தார். "நான்தோற்று விட்டேன். என் தோல்வியை ஒத்துக் கொள்கிறேன்'' என்றார்.

கிருஷ்ண தேவராயர் அவரைத் தனியே அழைத்துக கொண்டுபோய் "என்ன நடந்தது?" என்று விசாரித்தார். அந்த வித்துவான் விளக்கம் கொடுத்தார்."ஆண்டவன் ஒருவன தான் உண்டு என்பதை விளக்குவதற்காக நான் ஒரு விரலைக் காட்டினேன்.

அப்படி இல்லை சக்தியைச் சேர்த்தால் சக்தி சிவன் என்று இரண்டு பேர் உண்டு என்று உங்கள் விததுவான் விர லைக் காட்டினார். மூர்த்திகள் மூன்று பேர் என்று மூன்று விரலைக் காட்டினேன். வேதங்கள் நான்கு என்று நான்கு விரலைக் காட்டினார். பஞ்சபூதங் கள் ஐந்து என்று நான் ஐந்து விரலைக் காட்டினேன். அவற்றை அடககி ஆள வேண்டும் என்று சொல்லி அவர் முஷ் டியைக் காண்பித்தார்.அடடா உங்கள் வித்துவானுக்கு எப்பேர்ப்பட்ட அறிவு? அவர் தான் ஜெயித்தார். நான் தோற்று விட்டேன்'' என்று கூறிவிட்டு அவர் போய்விட்டார்.

அதன் பின் தெனாலிராமனைக் கூப்பிட்டு நடந்தது என்ன? என்று விசாரித்தார்கள். அதற்கு தெனாலி ராமன் விளக்கம் கொடுத்தான். "என்னைக் கொன்று விடுவேன் என்று அந்த வித்துவான் ஒரு விரலைக் காட்டினார். உன் கண் இரண்டையும் தோண்டிவிடு வேன் என்று நான் இரண்டு விரலைக் காட்டினேன். உனக்கு நாமம் போட்டு விடுவேன் என்று அவர் மூன்று விரலைக் காட்டினார். அதை நான் அழித்து விடுவேன் என்று அவர் நான்கு விரலைக காட்டினார்.நான் உங் களைக் குத்தி விடுவேன் என்று முஷ்டியைக் காட்டி னேன் என்றான்.

இபபோது பாருங்கள் ஜெயித்தது யார்? தைரியம் மட்டும இருந்துவிட்டால் அதிர்ஷ்டம் தானத் தேடிவரும் என்பது எவ்வளவு உண்மையாகிவிட்டது. அதனால் நாம் எப்போதும் தைரியமாக இருக்க வேண்டும் என்று கூறி விட்டு என எதிரில் உட்கார்ந்து கதை கேட்டுக் கொண்டி ருந்த சிறுவனைப் பார்த்தேன்.

அவன் என்னை நிமிர்ந்து பார்த்தான். தனது கை, கால் இரண்டையும் ஒரு மாதிரி தூக்கி 20 விர லைக் காட்டினான்.எனக்கு ஒன்றுமே புரிய வில்லை. "இதற்கு என்ன அர்த்தம்?" என்று கேட்டேன்."இதே கதையை இதறகு முன்பாக என்னிடம் இருபது முறை நீங்கள் கூறி யிருக்கிறீர்கள் என்று அர்த்தம்'' என்றான்.

தென்கச்சி கோ. சுவாமிநாதன்

# எமது நிபந்தனைகளை புலிகள் ஏற்றால் பேச்சை ஆரம்பிக்க பூரண ஆதரவு வழங்குவோம்

## ஹெல உறுமய அறிவிப்பு

(கொழும்பு)

**ஜாதிக ஹெல உறுயமக் கட்சியினால் விதிக்கப்படும் நிபந்தனைகளை தமிழீழ விடுதலைப் புலிகள் ஏற்று அவற்றுக்கு இணங்கும் பட்சத்தில் தடைப்பட்டுள்ள சமா தானப் பேச்சுவார்த்தைகளை மீண்டும் ஆரம்பிப்பதற்கு தமது பூரண ஆதரவினை வழங்க முடியும் என கட்சியின் தலைவர் எல்லாவல மேதானந்ததேரர் தெரி வித்துள்ளார்.**

கொழும்பில் நேற்று முன்தினம் நடைபெற்ற நிகழ் வொன்றில் கலந்துகொண்டு உரையாற்றியபோதே எல்லா வல மேதானந்ததேரர் இந்தக் கருத்தை வெளியிட்டுள் ளார்.

இலங்கையின் சட்ட திட்டங்களை ஏற்றுக்கொள்ள வேண்டும், சிறுவர்களை விடுதலைப்புலிகள் இயக்கத் தில் சேர்த்துக்கொள்வதை நிறுத்த வேண்டும், வடக்கு-கிழக் குப்பகுதிகளில் ஏனைய அரசியல் கட்சிகளின் செயற்பாடு களுக்கு அச்சுறுத்தலாக செயற்படக்கூடாது, புலிகள் ஆயுதங் களை கைவிடவேண்டும் போன்றனவே ஜாதிகஹெல உறு மய முன்வைத்திருக்கும் நிபந்தனைகள் ஆகும்.

ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவினால் முன் வைக் கப்பட்ட தேசிய ஆலோசனைச் சபை புலிகளினால் சமர்ப் பிக்கபபட்ட இடைக்கால நிர்வாக சபை யோசனையின் அடிப் படையில் செயற்படுமானால் தேசிய ஆலோசனைச் சபையை நாம் எதிர்ப்போம். அச்சபைக்கான எமது ஆதரவை விலக் கிக்கொள்வோம்.

ஐக்கிய மக்கள் சுதந்திரமுன்னணி அரசாங்கமும் ஐக்கிய தேசியக்கட்சியின் நிலைப்பாட்டையே பின்பற்றுமானால் அது நாட்டு மக்கள் சகலரது அபிலாஷைகளுக்கும் குந்தகம் விளை விக்கும் செயலாகவே அமையும் எனவும் எல்லாவல மேதா னந்ததேரர் மேலும் தெரிவித்துள்ளார். (ற-8)

# தோட்டத்தொழிலாளின் உரிமைகளை வென்றெடுக்க விடுதலைப் புலிகளுடன் இணைந்து செயற்படத் தயார்

## ம.ம.மு. தலைவர் சந்திரசேகரன் தெரிவிப்பு

(கொழும்பு)

மலையகத் தோட்டத்தொழிலாளர்களின் சம்பள உயர்வு உட்பட அவர்களுக்கான சகல உரிமைகளையும் பெற் றுக்கொடுப்பதற்காக தமிழீழ விடுதலைப் புலிகளுடன் இணைந்து செயற்படுவதற்கு மலையக மக்கள் முன்னணி தயாராகவுள்ளதாக மலையக மக்கள் முன்னணியின் தலை வரும் பாராளுமன்ற உறுப்பினருமான பெ. சந்திரசேகரன் தெரிவித்துள்ளார்.



கடந்த ஞாயிற்றுக் கிழமை ஹற்றன் நட்சத்திர சதுக்க மேடையில் நடை பெறற கூட்டத்தில் உரை யாற்றிய போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் அங்கு கருத்துரைக்கையில் தோட் டத் தொழிலாளர் களுக்கு நியாயமான சம்பள உயர்வை அரசாங்கமும் கம்பனிகளும் வழங்க முன் வரவேண்டும். இல்லை யென்றால் அனைவரும் ஒன்றிணைந்துகொண்டு தீர்க் கமான போராட்டம் ஒன்றை முன்னெடுப்போம்.

கூட்டு ஒப்பந்தம் மூலமான தோட்டத்தொழிலாளர்களை அடிமைப்படுத்த எவருக்கும் உரிமைகிடையாது. தோட்டக் கம்பனிகள் தொழிலாளர்களின் சம்பள உயர்வு விடயத்தில் நியாயமாக நடந்துகொள்ளவேண்டும். இல்லாவிட்டால் தோட் டங்களில் இருந்து கம்பனிக்காரர்கள் வெளியேற்றப்படு வார்கள் எனத் தெரிவித்தார்.

இதேவேளை, வட கிழக்கு பிரச்சினையிலேயே தற்போது மக்கள் முன்னணியன் கவனம் திரும்பியுள்ளது என எழுந்த குற்றச்சாட்டுக்கு சந்திரசேகரன் பதிலளிக்கையில்,

சிறுபான்மை மக்களின் கோரிக்கைகள் தொடர்பில் சர்வ தேச சமூகம் தற்போது திரும்பியுள்ளது. இந் நிலையில், வட கிழக்குப் பிரச்சினையுடன் மலையக மக்களின் பிரச்சினை களையும் உலகறியச் செய்யும் முயற்சியே இதுவாகும் எனத் தெரிவித்தார். (ற-121)

# இராசி பலன்

**06.10.2004**

**(புரட்டாதி 20, புதன்கிழமை)**
**அட்டமி பின்னிரவு 4.09 மணிவரை**
**திருவாதிரை பி.ப. 4.51 மணிவரை**
**இராகுகாலம் 12.02- 1.32 மணிவரை**
**சுபநேரம் 4.32 - 6.02 மணிவரை**
**மத்தியாஷ்டமி**

**மேடம்** இனிய அனுபவம், அந்நியர் சந்திப்பு, வாக்கு மேன்மை, புதிய பொருள்சேர்க்கை.

**இடபம்** கௌரவக் குறைவு, எடுத்த கருமங் கள் தாமதமாகும், மாதர் நட்பு, கோபப்படுதல்.

**மிதுனம்** நல்ல முயற்சி, ஆழ்ந்த சிந்தை, சயன சுகம், பெரியோர் சந்திப்பு.

**கடகம்** பிதா சிந்தை, காரிய இடையூறு, பிரயாணம், குறைந்த வருமானம்.

**சிங்கம்** நல்ல காரியம், களஸ்திர நன்மை, பெருமையடைதல், நல்ல செய்தி.

**கன்னி** சுப நிகழ்ச்சி, தொழிலில் ஆர்வம், நண்பர்கள் உதவி, பணவருவாய்.

**துலாம்** ஆன்றோர் மதிப்பு, அச்சமான நிலை, உடல்நலக் குறைவு, கட்டுப்பாடு.

**விருச்சிகம்** ஆரோக்கியக் குறைவு, வீண் தொல்லை, காரிய தடங்கல், வாகன பயம்.

**தனுசு** அபூர்வ சந்திப்பு, நல்ல வரு மானம், திடீர் பயணம், பெருமையடைதல்.

**மகரம்** சுக வாழ்வு, தடைப்பட்ட காரியம் கைகூடும், தொழில் நன்மை, பணவருவாய்.

**கும்பம்** முயற்சி தாமதம், பதற்ற நிலை, ஆரோக்கியக் குறைவு, தனவிரயம்.

**மீனம்** வீண் சம்பாசனை, அதிக முயற்சி, நண்பர்கள் சந்திப்பு, தனவிரயம்.

பழைய நேரப்படி கணிப்பிடப்பட்டது
- வளவன்

## விடுதலைப்புலிகளுக்கு எதிரான அடிப்படை உரிமை மீறல்வழக்கு டிசம்பர் 13 இல் விசாரணைக்கு

(கொழும்பு)

தமிழீழ விடுதலைப் புலிகளுக்கு எதிராக சமர்ப்பிக்கப் பட்டுள்ள அடிப்படை மீறல் வழக்குகளை எதிர்வரும் டிசம்பர் மாதம் 13ஆம் திகதி விசாரணைக்கு எடுத்துக்கொள்வது என உயர் நீதிமன்றம் தீர்மானித்துள்ளது.

இந்த மனுக்கள் ஈ.பி.டி.பி.யினாலும் கடந்த ஏப்ரல் மாதம் இடம்பெற்ற பொதுத் தேர்தலின்போது சுயேட்சைக் குழுவாக போட்டியிட்ட முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் வீ.அனந்த சங்கரியினாலும் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன. தேர்தல்கால பகுதி யில் யாழ்ப்பாண மாவட்டத்தில் வன் செயல்களையும் சட்டவிரோத நடவடிக்கைகளையும் தமிழீழ விடுதலைப் புலிகள் மேற்கொண்ட தாக அந்த மனுவில் அவர்கள் குற்றஞ்சாட்டியுள்ளனர். (க)

## ஆசிரியர் தின விழா

வலிகாமம் மேற்குப்பிரதேச சனசமூக நிலையங்களின் சமாசத்தின் ஏற்பாட்டில், வடக்கு-கிழக்கு மாகாண முன்பள் ளிக் கல்வி மேம்பாட்டு நிலைய சங்கானைப் பிரதேசமுன் பள்ளியின் ஆசிரியர் தினவிழா இன்று புதன்கிழமை பி.ப 3.00மணிக்கு சித்தன்கேணி ஸ்ரீகணேசா வித்தியா சாலை மண்டபத்தில் சமாசத் தலைவர் க.நற்குணம் தலைமை யில் நடை பெறவுள்ளது. இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக வலி-மேற்கு பிரதேச செயலர் சீ.ஏ.மோசன்றாஸும் கௌரவ விருந்தினர்களாக யாழ். மாவட்டச் செயலக புள்ளிவிபர உத்தியோகத்தர் சிவசோதி, யாழ்.பிரதேச சனசமுக நிலைய அபிவிருத்தி உத்தியோகத்தர். திருமதி சிவசோதி ஆகி யோரும் சிறப்புவிருந்தினர்களாக வலி-மேற்குப்பிரதேசசபைச் செயலாளர் திருமதி புஷ்பமலா சிவலிங்கம் வலிமேற்கு அரசி யல் துறைப் பொறுப்பாளர் அ.அன்பு ஆகியோர் உட்பட மற்றும் பலரும் கலந்து கொள்ளவுள்ளனர். (ற-49)

ஒருமைக் கண் தான்கற்ற கல்வி ஒருவற்கு
எழுமையும் ஏமாப் புடைத்து - குறள்

வலம்புரி

# ஆசிரியர் – மாணவர் உறவு உயர்வு பெறட்டும்

இன்று சர்வதேச ஆசிரியர் தினம். மேற்குலக நாட்டவர் தமது இயந்திர வாழ்வில் வாழ்வியலின் அர்த்தங்களை மறந்துபோனவர்கள். அத்தகைய மறப்பு மேற்குலகத்தின் வாழ்வியலில் பெரும் எதிர் விளைவுகளை ஏற்படுத்திவிடும் என்பதன் காரணமாக சர்வதேச தினங்களை அவர்கள் பிரகடனப் படுத்தினர்.

மேற்குலகின் தயாரிப்புகளை தலையால் நிறைவேற்றும் கிழக்கு உலக நாடுகள் மேற்குலகம் தனது சூழ்நிலைக்கு ஏற்ப - தனக்காக ஆக்கியவற்றையும் எடுத்துக்கொண்டது.

அதன் ஓர் நிகழ்வே சர்வதேச ஆசிரியர் தினமாகும். உரிமையற்ற - எழுச்சி பெறவேண்டிய- அக்கறை செலுத்தப்படவேண்டிய விடயங்களுக்கே 'சர்வதேச தினம்' பிரகடனப்படுத்தப் படுவது வழக்கம். ஆனால் இந்நிலைமை மாறி ஆசிரியர்களுக்குக்கூட ஓர் தினம் பிரகடனப் படுத்தி அதனை நடைமுறைப்படுத்தப்பட வேண்டியதாயுள்ளது.

தமிழ் மக்களைப் பொறுத்தவரை அவர்கள் குரு - சிஷ்ய கல்வி மரபைக் கொண்டவர்கள். ஆனால், மேற்குலக நாடுகள் அவ்வாறன்று. அங்கு தோழமைக் கல்வி முறையே உண்டு.

அதாவது மேற்குலக நாடுகளில் ஆசிரியர்களும், மாணவர்களும் நண்பர்களாகவே பழகிக் கொள்வார்கள். இந்த முறைமை நமக்குப் பொருத்தமன்று.

எனினும் மேற்குலகக் கல்வி முறைகள் நமது நாட்டிலும் உள்வாங்கப்பட்டதன் காரணமாக ஆசிரியர் - மாணவர் உறவில் மாற்றம் ஏற்படவே செய்துள்ளது. ஆசிரியர் என்போர் அறிவெனும் ஒளியை ஏற்றுபவர்கள். அவர்கள் எந்நாளும் கௌரவிக்கப்படவேண்டியவர்கள். அவர்களின் ஆசியும், அன்பும் கிடைக்கப்பெறுகின்ற மாணவர்களே எதிர்காலத்தில் நன்னிலையில் வாழ்கின்றனர்.

இத்தகைய ஆசிரியர்களை சர்வதேச ஆசிரியர் தினம் என்ற பேரில் ஒரு நாள் மதிப்பு - கௌரவத்துடன் கடமை நிறைவுபெறுவதாக மாணவர்கள் நினைப்பது தவறாகும்.

சந்தனமென் குறடு தான் தேய்ந்து கந்தம் வீசுவது போல தாம் பெற்ற அறிவை மாணவர்களுக்கு வழங்கும் ஆசிரியர்கள் என்றும் போற்றப்படவேண்டியவர்கள்.

மேற்குலகின் நாகரிக மோகத்தில் வீழ்ந்து எமது பண்பாட்டியல்புகளை மறக்காமல் வாழ்வது எமது இனத்தின் மகத்துவத்தை காப்பாற்றும் நடவடிக்கையாகும்.

மாதா, பிதா; குரு, தெய்வம் என்ற வாக்கு நம் வாழ்வியலில் அடிநாதமாக இருத்தல் வேண்டும். பெற்றோர்தினம் கொண்டாடும் மேற்குலக அவல நிலை இங்கும் ஏற்பட்டுவிடுமோ என்ற ஏக்கத்தின் மத்தியில், ஆசிரியர் மாணவர் உறவு மீண்டும் வலுப்பெறுவது அவசியமாகும். ஆசிரியர்கள் நமக்கு அறிவூட்டிய பெருந்தகைகள். அவர்களை என்றும் எம் நெஞ்சத்தால் வாழ்த்துவோம், வணங்குவோம். இந்த உறுதியை இன்றைய ஆசிரிய தினத்தில் மாணவர்கள் ஒவ்வொருவரும் எடுத்துக்கொள்ளவேண்டும்.

அதேபோல் ஆசிரியர்களும் தம்மை நம்பி வருகின்ற மாணவர்களின் கல்வி வளர்ச்சியில் அதீத அக்கறையோடு செயலாற்றுவது மிகவும் அவசியமாகும். மாணவர்களை நல்வழிப்படுத்தும் எந்த ஆசிரியரையுமே கல்விச் சமூகம் மறந்ததில்லை. இது உறுதி.

# யாழ்ப்பாணக் கல்வி வளர்ச்சிக்கு வித்திட்டவர்கள் எமது ஆசிரியர்களே

## யாழ். மாவட்ட கல்வி மேம்பாட்டுப் பேரவை வாழ்த்து

(யாழ்ப்பாணம்)

இன்று சர்வதேச ஆசிரிய, தினம். இத்தினத்திலே எமது ஆசிரியர்களை மனமாரப் பாராட்டி வாழ்த்துவதில் கல்வி மேம்பாட்டுப் பேரவை மகிழ்வடைகின்றது. உண்மையிலேயே ஆசிரியர்கள் இன்றைய தினத்தில் மட்டும் பாராட்டுக்குரியவரல்லர். மாணவர்களின் நலனுக்காக தம்மை அர்ப்பணித்து சேவை மனப்பான்மையுடன் கற்பிக்கின்ற ஆசிரியர்கள் என்றென்றும் தெய்வமாகப் போற்றப் படவேண்டியவர்கள்.

இவ்வாறு யாழ். மாவட்ட கல்வி மேம்பாட்டுப் பேரவையினால் வெளியிடப்பட்ட ஆசிரியர் தின வாழ்த்துச் செய்தியில் குறிப்பிடப்பட்டுள்ளது. அவ்வாழ்த்துச் செய்தியில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது,

யாழ்ப்பாண கல்வி வரலாறு ஒரு காலகட்டத்தில் இலங்கையில் மட்டுமல்லாமல் சர்வதேசத்திலும் பெருமையுடன் பேசப்பட்டு, புகழப்பட்டுவந்தமை யாவரும் அறிந்ததே. பல்கலைக்கழக அனுமதியில் பெரும் எண்ணிக்கையைக் கொண்டிருந்தவர்கள் யாழ்ப்பாண மாணவர்கள். இத்தகைய பெருமைக்கு வித்திட்டவர்கள் எமது ஆசிரியர்களே.

யாழ்ப்பாண மாணவர்களின் கல்வி வளர்ச்சியைப் பொறுக்காத பேரினவாத அரசு தமிழ் மாணவர்களின் கல்வியில் பாதிப்பை ஏற்படுத்தும் நிகழ்வாகத் தரப்படுத்தலைக் கொண்டுவந்து யாழ்ப்பாணக் கல்வியை சிதைவடையச் செய்தது.

அது மட்டுமன்றி கடந்த இரு தசாப்தங்களாக நடைபெற்ற போரும், இடப்பெயர்வும், புலப்பெயர்வும் எமது கல்வியில் பாரிய தாக்கத்தை ஏற்படுத்தின. இந்நிலையிலிருந்து விடுபட்டு மீண்டும் எமது கல்வித் தரத்தினை உயர்த்துவதற்கு கல்வி நிர்வாகமும் ஆசிரிய உலகமும் ஆழமாகச் சிந்தித்து கல்வியை முன்னெடுக்க வேண்டிய தேவை இன்று ஏற்பட்டுள்ளது.

சமூகக் கலாசார விழுமியங்களில் ஏற்பட்டுள்ள பிறழ்வு மாணவ உலகத்தைப் பாதித்து அவர்களின் நடத்தைக் கோலங்களில் மாற்றத்தை ஏற்படுத்தியுள்ளது. பள்ளி மாணவர்களின் கல்விக்கான பொறுப்பை ஆசிரியர்கள் முழுதாகப் பொறுப்பேற்றிருந்த நிலைமாறி தனியார் கல்வி நிறுவனமும் இணைந்து நிற்பதனால் மாணவர்கள் தமது கற்றல் நேரத்தை வீணடிக்கின்ற நிலைமையும் ஏற்பட்டுள்ளது.

இந்நிலையில் எமது மாணவர்களின் கல்வி அடைவு மட்டம் அண்மைக் காலங்களில் வீழ்ச்சியடைந்துள்ளது என்ற பேச்சு காதுகளில் அடிபடுவதும் இங்கு சுட்டிக்காட்டப்படவேண்டிதொன்றாகும்.

"கல்வி எமது சொத்து" என்ற பெரு நம்பிக்கையுடன் வாழ்பவர்கள் யாழ்ப்பாண மக்கள். இவற்றுக்கெல்லாம் வழிசமைக்கவேண்டியவர்கள் அர்ப்பணிப்புடன் சேவையாற்றுகின்ற எமது ஆசிரியர்களே. அந்த வழியில் மீண்டும் ஆசிரியர்கள் நடக்க ஆரம்பித்துவிட்டார்கள் என்பதை அண்மைக்கால பொதுப் பரீட்சை முடிவுகள் எமக்கு நம்பிக்கை ஊட்டுகின்றன. இந்த வெற்றிப் பாதையில் ஆசிரியர்களை வீறுநடை போடச் செய்வதற்கு யாழ்ப்பாண கல்வி மேம்பாட்டுப் பேரவை என்றும் உறுதுணையாக நிற்கும் என குறிப்பிடப்பட்டுள்ளது. (ச)

## தமிழ் அரசியல் கைதிகள்

# கருணை நடவடிக்கை எடுக்கக்கோரி களுத்துறை சிறையிலிருந்து கடிதம்

களுத்துறை சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டுள்ள 36 தமிழ் அரசியல் கைதிகள் தம்மை பிணையில் விடுவிப்பதற்கு கருணை நடவடிக்கைகளை எடுக்குமாறு கோரி மன்னார் மறை மாவட்ட ஆயர் இராயப்பு ஜோசாப் ஆண்டகைக்கு கடிதம் ஒன்றை அனுப்பிவைத்துள்ளனர்.

பல்வேறு அரசியல் குற்றச்சாட்டுக்களின்பேரில் கைது செய்யப்பட்டு களுத்துறை சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டுள்ள 36 தமிழ் அரசியல் கைதிகளில் 14 பேருக்கு சிறைத் தண்டனைகள் மற்றும் ஆயுதத்தண்டனைகள் விதிக்கப்பட்டுள்ளன. ஏனைய 22 பேர் தொடர்பான விசாரணைகள் இடம்பெற்றுவருகின்றபோதிலும் அவை இழுபறி நிலையிலேயே இருந்து வருகின்றன.

இந்நிலையில் அங்கு தடுத்து வைக்கப்பட்டுள்ள தமிழ்க் கைதிகளை மனிதாபிமான அடிப்படையில் விடுவிக்க நடவடிக்கை எடுப்பதாக உறுதியளித்த தமிழ்ப் பாராளுமன்ற உறுப்பினர்களும் உரிய தரப்பினருடன் பேசி உடனடி நடவடிக்கைகள் எதனையும் எடுக்கவில்லை.

எனவே இவ்வாறான ஏமாற்றுநடவடிக்கைகளாலும் இழுபறி செயற்பாடுகளாலும் தாம் கடுமையாகப்பாதிக்கப்பட்டிருப்பதாகச் சுட்டிக்காட்டி களுத்துறைச் சிறைச்சாலையில் இருந்து 36 கைதிகள் மேற்படி கடிதத்தை அனுப்பி வைத்துள்ளனர்.


அத்துடன், தற்போதுள்ள யுத்த நிறுத்த சூழ்நிலை பல்வேறு அரசியல் இழுபறிகளாலும் இராணுவச் செயற்பாடுகளாலும் குழப்பமடையக் கூடிய நிலை காணப்படுகிறது.

எனவே தற்பொழுதுள்ள இக்கட்டான யுத்தநிறுத்த சூழலில் தம்மை விடுவிக்க நடவடிக்கைகளை எடுக்காவிடின் தம்மை விடுவிப்பது என்றுமே சாத்தியமில்லை எனவும் அவாகள் மேலும் அக்கடிதத்தில் சுட்டிக்காட்டியுள்ளனர். (ப)

# தேசிய ஆலோசனை சபையால் நாட்டிற்கு எதுவித நன்மையுமில்லை

## இரா. சம்பந்தன் சுட்டிக்காட்டு

ஜனாதிபதி அமைத்துள்ள தேசிய ஆலோசனை சபை எந்த முன்னேற்றத்தையும் ஏற்படுத்தமாட்டாது என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான இரா.சம்பந்தன் தெரிவித்துள்ளார்.



ஜனாதிபதியின் தேசிய ஆலோசனைசபை தொடர்பாகக் கருத்து தெரிவிக்கையிலேயே அவர் மேற்கண்டாவாறு குறிப்பிட்டார். அவர் இது விடயம் குறித்து மேலும் கருத்துத் தெரிவிக்கையில்,

ஜனாதிபதியினால் அங்குரார்ப்பணம் செய்துவைக்கப்பட்ட தேசிய ஆலோசனை சபை சமாதான முயற்சிகளை இன்னும் குழப்பமடைய வைப்பதுடன் தாமதங்களையும் ஏற்படுத்தும்.

இதனால் சமாதான நடவடிக்கைகளுக்கோ, நாட்டிற்கோ எதுவித நன்மையும் ஏற்படப்போவதில்லை.

கடந்த 1984ஆம் ஆண்டுக்குப்பின்னர் இவ்வாறான நிகழ்வுகள் தொடர்ச்சியாக இடம்பெற்று வருகின்றன பிராதன எதிர்க்கட்சியான ஐக்கிய தேசியக்கட்சி மற்றும் மலையக மக்கள் முன்னணி, மேல் மாகாண மக்கள் முன்னணி, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு, ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் ஆகியவற்றின் ஆதரவின்றி அமைக்கப்பட்டுள்ள இவ் ஆலோசனைச் சபையால் எதுவித முன்னேற்றமான நடவடிக்கையையும் எடுக்க முடியாது எனவும் குறிப்பிட்டார். (ற)

# விடுதலைப்புலிகள் – இராணுவம் இன்று வவுணதீவில் சந்திப்பு

மட்டக்களப்பு மாவட்டத்தில் விடுதலைப் புலிகளுக்கும் இராணுவ அதிகாரிகளுக்குமிடையிலான நல்லெண்ணச் சந்திப்பு ஏற்கனவே தீர்மானித்தபடி இன்று புதன்கிழமை வவுணதீவு யுத்த சூனிய பிரதேசத்தில் முற்பகல் 10.30 மணிக்கு இடம்பெறவுள்ளது.

கடந்த மாதம் 22ம் திகதி இடம்பெற்ற இரு தரப்பு சந்திப்பில் எடுக்கப்பட்ட தீர்மானத்திற்கு அமைய மாதத்தில் இருதடவை இத்தகைய சந்திப்புகள் இடம்பெறவேண்டும். இன்று நடைபெற வேண்டிய சந்திப்பு விடுதலைப் புலிகள் கேட்டுக்கொண்டதற்கிணங்க, எற்கனவே பிற்போடப்பட்டிருந்ததாகப் போர் நிறுத்தக் கண்கானிப்புக் குழுவினால் தெரிவிக்கப்பட்டிருந்தது.

இந்நிலையில் நேற்றைய தினம் போர்நிறுத்தக் கண்காணிப்புக்குழுத் தரப்பிலிருந்து வெளியிடப்பட்ட தகவலின் படி ஏற்கனவே தீர்மானித்த்றகு இணங்க இந்தச்சந்திப்பு இடம்பெறும் என தெரிவிக்கப்பட்டுள்ளது. (ற)

# காரை கமநலசேவை நிலையம் திறந்து வைக்கப்பட்டது

(காரைநகர்)

காரைநகர் கமநல சேவைத்திணைக்களம் நேற்று முன் தினம் வைபவ ரீதியாக திறந்து வைக்கப்பட்டுள்ளது. காரைநகர் கமநலசேவைத் திணைக்களத் தலைவர் சிவஞானம் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் யாழ். அரச அதிபர் செ. பத்மநாதன் வைபவரீதியாக நாடாவெட்டித் திறந்துவைத்தார்.

இந்நிகழ்வில் யாழ். கமநல சேவை உதவி ஆணையாளர், காரைநகர் பிரதேச செயலர், சங்கானை பிரதேச செயலர் மற்றும் யாழ். கமநல சேவை உயர் அதிகாரிகள் எனப்பலரும் கலந்து கொண்டனர்.

யாழ். மாவட்டத்தின் 13வது கமநல சேவைத்திணைக்களம் இதுவாகும். இத்திணைக்களம் திறந்து வைக்கப்பட்ட ஆரம்ப நாளான நேற்று முன்தினமே உரம் விதைகள் என்பன விநியோகிக்கப்பட்டன. (ற-246)

## தினசரி தியானம்

### விவேகச் சிந்தனைகள்

என் குழந்தைகளே! இரக்கம் கொள்ளுங்கள். ஏழைகள் அறியாமையில் இருப்பவர்கள் தாழ்த்தப்பட்டவர்கள் ஆகியவர்களுக்காக இரக்கம் கொள்ளுங்கள் இதயமே நின்று போகும் வரையிலும் மூளை கொதித்துப் போகும் வரையிலும் இரக்கம் கொள்ளுங்கள்.

சுவாமி விவேகானந்தர்

# தேசிய ஆலோசனை சபை அங்குரார்ப்பணம்

# சமாதானத்தை இழுத்தடிப்பதற்கான சதியே

## பேராசிரியர் ஜீ.எல்.பீரிஸ் குற்றச்சாட்டு

தேசிய ஆலோசனைசபை அங்குரார்ப்பணம் செய்துவைக்கப்பட்டமையானது சாமாதான பேச்சுவார்த்தைகளை இழுத்தடித்துக் காலம் கடத்துவதற்கான ஒரு சதியாகவே நாம் கருதுகின்றோம். என ஐக்கிய தேசியக் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினரும், கட்சியின் ஊடகப்பேச்சாளருமான ஜீ.எல்.பீரிஸ் தெரிவித்துள்ளார்.

தேசிய ஆலோசனைச் சபை தொடர்பாக பி.பி.சியின் தமிழோசைக்கு வழங்கிய விசேட பேட்டியிலேயே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர்அங்கு மேலும் கருத்துத் தெரிவிக்கையில்,

உண்மையில் பிரச்சினை எதுவென்று அடையாளம் கண்டு அதற்குரிய தீர்வினை நாம் அடையவேண்டும். விடுதலைப் புலிகளின் இடைக்காலத்தன்னாட்சி அதிகார சபை யோசனையின் அடிப்படையில் பேச்சுவார்த்தை தொடங்க அரசு தயாராக இருக்கின்றதா? என்ற கேள்விக்கு அரசு முறையான பதில் எதனையும் தரவில்லை.

இந்நிலையில், அதன் அடிப்படை யில் எவ்வாறு சமாதானப் பேச்சுவார்த்தைகளை ஆரம்பிப்பது? இது கடினமானதோர் விடயமாகும்.

அதேவேளை, விடுதலைப் புலிகளின் இடைக்கால நிர்வாக வரைபு தொடர்பாக அரசாங்கத்தினுள் அங்கம்வகிக்கும் ஜே.வி.பி. கடுமையான நிலைப்பாட்டைக் கொண்டுள்ளது. இந்நிலைமைதான் ஜனாதிபதி சமாதானப் பேச்சுவார்த்தைகளை முன்னெடுப்பதற்குத் தடையாக உள்ளது.

இது அரசின் உள்வீட்டுப் பிரச்சினையாகும். இப் பிரச்சினை அவர்களினாலேயே தீர்க்கப்படவேண்டும். எதிர்க் கட்சிகள் இப்பிரச்சினை தொடர்பாக எடுக்கவேண்டிய நடவடிக்கை என்றுமில்லை.

சமாதானப் பேச்சுவார்த்தைகளை ஆரம்பிப்பதற்கு நாம் தயாராக இருக்கின்றோம்.

இடைக்கால நிர்வாகத்தின் அடிப்படையிலோ, ஒஸ்லோ உடன்படிக்கையின்



அடிப்படையிலோ சமாதானப் பேச்சுவார்த்தைகள் முன்னெடுக்கப்படும் பட்சத்தில் நாம் அதனை முழுமையாக ஆதரிப்போம் என்று ஜனாதிபதியிடம் பலமுறை நாம் தெரிவித்துள்ளோம் எனவும் சுட்டிக் காட்டினார். (ற-8)

## ஆசிரியர்கள் கௌரவிப்பு

(யாழ்ப்பாணம்)

ஆசிரியர் சேவையில் 25 வருடங்களைப் பூர்த்திசெய்த கொக்குவில் இந்துக் கல்லூரி ஆசிரியர்களான திருமதி சு.திருச்செல்வம், திருமதி லி.வைத்தியகுமார், சி.சரவணபவன், ஜெ.குமாரதேவன் ஆகியோர் இன்று கௌரவிக்கப்படவுள்ளனர். கல்லூரி ஆசிரிய சமூகமும், பழைய மாணவர் சங்கமும் இணைந்து நடத்தும் இவ்கௌரவிப்பு நிகழ்வு கல்லூரியின் பிரதான மண்டபத்தில் இடம்பெறும். (ந)

## ஆசிரியர்தின விழா

(யாழ்ப்பாணம்)

உரும்பிராய் இந்துக் கல்லூரியில் ஆசிரியர் தினவிழா இன்று காலை 9.30 மணிக்கு கல்லூரியின் உயர்தர மாணவர் மன்றத் தலைவர் பே.றொசானந்தனின் தலைமையில் கல்லூரியின் பிரார்த்தனை மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் சிறப்பு விருந்தினராக ஓய்வுபெற்ற ஆசிரிய ஆலோசகர் லயன் க.செல்வப்பிரகாசமும், வாழ்த்துச் செய்தியை கல்லூரியின் முதல்வர் அ.ஈஸ்வரநாதனும் வழங்குவர். (த)

## கொலைச் சந்தேக நபர் நீதிமன்றில் ஆஜராகவில்லை

மட்டக்களப்பு சிறைச்சாலையில் கருணா குழுவைச் சேர்ந்த சச்சு மாஸ்டர் உட்பட இருவர் சுட்டுக் கொல்லப்பட்ட சம்பவத்துடன் தொடர்புடைய சந்தேகநபரான மகேந்திரன் புவிதரன் நேற்று 4 ஆவது தடவையாகவும் நீதிமன்றத்தில் ஆஜர் படுத்தப்படவில்லை.


கடந்த யூலை மாதம் 15 ஆம் திகதி மட்டிக்களப்பு சிறைச்சாலையில் விளக்கமறியல் கைதிகளான கருணா குழுவைச் சேர்ந்த சச்சு மாஸ்டர் எனப்படும் கணபதிப்பிள்ளை மகேந்திரன் மற்றும் தீபன் எனப்படும் சரவணமுத்து சாந்தகுமார் ஆகியோர் சுட்டுக் கொல்லப்பட்டனர். இந்த கொலை தொடர்பாக சிறைக் கைதியான மகேந்திரன் புவிதரன் என்பவரும் அதற்கு உடந்தையாக இருந்தார் என்ற சந்தேகத்தின் பேரில் சிறைக் காவலரான தம்பிராசா அருளம்பலம் என்பவரும் கைதாகி தற்போது விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர்.

பாதுகாப்பின் நிமித்தம் பதுளை சிறைச்சாலையில் வைக்கப்பட்டுள்ள முதலாவது சந்தேக நபரான மகேந்திரன் புவிதரன் நேற்று 4 ஆவது தடவையாகவும் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்படவில்லை.

இவரை அங்கிருந்து அழைத்து வருவதில் பாதுகாப்பு தொடர்பான பிரச்சினைகள் இருப்பதாக மட்டக்களப்பு சிறைச்சாலை அத்தியட்சகர் நேற்று நீதிமன்றத்தில் அறிக்கை சமர்ப்பித்தார்.

மட்டக்களப்பு சிறைச்சாலையில் வைக்கப்பட்டுள்ள இரண்டாவது சந்தேக நபர் மட்டும் ஆஜர்படுத்தப்பட்டார். இதனையடுத்து குறிப்பிட்ட இரண்டு சந்தேக நபர்கள் மீதான விளக்கமறியலை நீதிவான் நீதிமன்ற நீதிபதி எம்.எச்.எம்.அஜ்மிர் எதிர்வரும் 19 ஆம் திகதி வரை நீடித்தார்.

அதேவேளை, கடந்த வருடம் யூலை மாதம் 14 ஆம் திகதி மட்டக்களப்பு கல்லடி பாலத்தில் ஆயுதங்களுடன் கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ள 4 பெண்கள் உட்பட 8 விடுதலைப் புலிப் போராளிகளின் விளக்கமறியலும் நேற்றுமுதல் எதிர்வரும் 19 ஆம் திகதிவரை மேலும் நீடிக்கப்பட்டுள்ளது.(ச)



தீருவிலில் நடைபெற்ற பன்னிரு வேங்கைகளின் நினைவு நிகழ்வில் தமிழீழத் தேசியக் கொடியினை ஏற்றுவதைப் படத்தில் காணலாம்.

## தடுத்து வைக்கப்பட்டிருப்பவர்களை

காவற்படையினரை ஆயுதங்களுடன் விடுதலைப் புலிகள் பிடித்துள்ள நிலையில், அவர்களை விடுவிப்பதற்கு யுத்தநிறுத்த கண்காணிப்புக்குழு தொடர்ந்து முயற்சிகளை எடுத்து வருவதாக புலிகள் தரப்பில் தெரிவிக்கப்படுகின்றது.

இந் நிலையில் யுத்தநிறுத்தக் கண்காணிப்புக்குழுத் தலைவர் மேஜர் ஜெனரல் ரொண்ட் பியூறு ஹெவ்டே பாதுகாப்பு அமைச்சர் சிறில் ஹேரத்தை நேற்று முன்தினம் சந்தித்துப் பேசியபின் அது தொடர்பாக நேற்று விடுத்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது,

தமிழீழ விடுதலைப் புலிகளின் பத்து உறுப்பினர்களை படையினர் ஆயுதங்களுடன் கைதுசெய்திருப்பதும், இரண்டு ஊர்காவல் படையினரை ஆயுதங்களுடன் விடுதலைப் புலிகள் கைதுசெய்திருப்பதும் இரு வெவ்வேறு சம்பவங்கள் ஆகும். இந் நிலையில் இரண்டு சம்பவங்களுக்கும் இடையில் தொடர்பை ஏற்படுத்த முனைவது ஏற்றுக்கொள்ளக்கூடிய சம்பவம் அல்ல.

இரண்டு ஊர்காவல் படையினரையும் விடுவிப்பதற்காக தமது அமைப்பைச் சேர்ந்த பத்து உறுப்பினர்களை விடுவிக்கக் கோருவது நீதிமன்ற சட்டதிட்டத்திற்கு முரணானதாகும். இதேபோல் இரண்டு ஊர்காவல் படையினரையும் விடுவிப்பதற்கு திருகோணமலையில் உள்ள அமைப்பொன்று இவ் விடயத்தை தமக்குச் சாதகமாகப் பயன்படுத்தி யுத்தநிறுத்த கண்காணிப்புக் குழுவிற்கு அபகீர்த்தியையும் அசௌகரியத்தையும் ஏற்படுத்தும் பொறுப்பற்ற தன்மை ஆகும்.

எனவே இரண்டு ஊர்காவற் படையினரையும் விடுவிப்பதற்கான முடிவுகளை விடுதலைப் புலிகள் மீள்பரிசீலனை செய்ய வேண்டும் என்று யுத்தநிறுத்த கண்காணிப்புக் குழுத் தலைவர் தனது அறிக்கையில் கேட்டுக் கொண்டுள்ளார். (ச-08)

## 25 இந்திய மீனவர்கள் மன்னாரில் கைதாகினர்

(மன்னார்)

மன்னார் தெற்கு பேசாலை கடற்பரப்பில் சட்டவிரோதமான முறையில் மீன் பிடித்துக்கொண்டிருந்த 25 இந்திய மீனவர்கள் நேற்று முன்தினம் இரவு இலங்கைக் கடற்படையினரால் கைதுசெய்யப்பட்டுள்ளார்கள்.

5 இழுவைப் படகுகளில் மீன்பிடித்துக் கொண்டிருந்த இவர்களை இலங்கைக் கடற்படையினரின் ரோந்துப் பிரிவினர் கைதுசெய்து தலைமன்னார் பொலிஸாரிடம் ஒப்படைத்துள்ளார்கள். இந்த மீனவர்கள் நேற்று மாலை மன்னார் மாவட்ட நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்டு, எதிர்வரும் 19 ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார்கள். (ச)


### பாராட்டுகின்றோம்

வசந்தபுரம் இளவாலையைச் சேர்ந்த
சுதாகரன் - யூஜின் ஜெனிற்றா
தம்பதிகளின் செல்வப் புதல்வியும்
யாழ்.இளவாலை மெய்கண்டான்
மகாவித்தியாலய மாணவியுமாகிய

செல்வி சுவேதிகா
(திவ்வியா)



அவர்கள் 2004 தரம் - 5 புலமைப் பரிசில் பரீட்சையில் 139 புள்ளிகள் பெற்றுச் சித்தியடைந்ததையிட்டு அவரை மனமார வாழ்த்துவதுடன், அவர் தொடர்ந்தும் வெற்றிபெற எமது நல்லாசிகளைத் தெரிவிப்பதோடு, அவர் சித்தியடைய ஊக்கமளித்து வழிகாட்டிய அதிபர், ஆசிரியர்கள் மற்றும் காந்தி கல்வி நிலைய ஆசிரியர் திரு. S.சுதன் ஆகியோரையும் நன்றியுடன் வாழ்த்துகின்றோம்.

பாராட்டுபவர்கள்: அப்பா, அம்மா, அக்கா (வித்தியா), தம்பிமார் (சுவீஸ்ரன், சுவேதிகன்) (C-611)


### கிளிநொச்சியில்...

வைக்கப்படவுள்ளன. மேலும் குறிபார்த்து துப்பாக்கியால் சுடும் போட்டி நடத்தப்பட்டு வெற்றி பெறுவோர்க்கு பரிசுகளும் வழங்கப்படவுள்ளன. அத்துடன் கண்காட்சியின் சிறப்பம்சமாக விடியல், படைவீடு போன்ற படைமுகாமும் பல சிறப்பம்சங்களுடன் அமையவுள்ளது. மாதிரி களமருத்துவம்னை, கடற்புலிகளின் மாதிரி கடற்கலங்களின் இறங்குதளம் போன்றனவும் காட்சிக்கு வைக்கப்படவுள்ளன. இரவு விடுதலைப் புலிகளின் மகளிர் படையணிகளின் கலை நிகழ்வுகள் இடம்பெறவுள்ளன. (ச)

### பேரினவாதமோ...

கள் தமிழ்த் தேசியத்தை அழிக்க காலம் காலமாக முயுன்று வருகின்றன. இதன் ஒரு நிகழ்வே பன்னிரு வேங்கைகளின் வீரமரணம்.

பேரினவாதமோ, அதன் நேச சத்திகளோ தமிழ் இனத்தை அழிக்க நாம் ஒருபோதும் அனுமதிக்க மாட்டோம். இடைக்கால நிர்வாக வரைபு தொடர்பாக சர்வதேச சமூகத்திற்கு நாங்கள் விளக்கி வருகின்றோம். ஆனால் இலங்கை அரசு சர்வதேச சமூகத்தைக்கொண்டு தமிழினத்தை அழிக்க முயல்கின்றது என குற்றஞ்சாட்டினார். (ச-43)

### பன்னிரு...

விரிவுரையாளர் குமாரவேல், மாவீரர் பணி மனைப் பொறுப்பாளர் பொன். தியாகம், யாழ். மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் இளம்பரிதி ஆகியோர் நினைவுரைகளை நிகழ்த்தினர். தொடர்ந்து கலை நிகழ்வுகளும் இடம்பெற்றன.

இதேவேளை பன்னிரு வேங்கைகளினதும் நினைவு தினம் புங்குடுதீவில் நேற்றுக் காலை 9 மணிக்குப் புங்குடுதீவு பெருங்காடு கந்தசுவாமி கோவில் முன்றலில் புங்குடுதீவு தேசிய எழுச்சிப் பேரவையின் செயலாளர் ரி. விநாயகமூர்த்தி தலைமையில் நடைபெற்றது.

இந்நிகழ்வில் பொதுச் சுடரினை புங்குடுதீவு சுப்பிரமணிய மகளிர் வித்தியாலய அதிபர் க.பஞ்சலிங்கம் ஏற்றினார்.

தேசியக் கொடியினை புங்குடுதீவு தியாகி திலீபன் மருத்துவமனைப் பொறுப்பாளர் வண்ணன் ஏற்றினார்.

ஈகச் சுடரினை புங்குடுதீவு அரசியல்துறைப் பொறுப்பாளர் இசைச் செல்வன் ஏற்றினார். தொடர்ந்து அஞ்சலி உரைகளும் கலை நிகழ்வுகளும் இடம்பெற்றன.

(ச-126-19-05-103-130)

இப் பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.15 வெள்ளாந்தெரு, யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 06.10.2004 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.